விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 24 வியாழக்கிழமை (08.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020

# இன்று ஜனாதிபதித் தேர்தல்
# நாடு பூராகவும் வாக்களிப்பு

- வாக்காளர் - 15,044,490 பேர்
- ஜனாதிபதி வேட்பாளர்கள் - 19 பேர்
- தேர்தல் மாவட்டங்கள் - 22
- தேர்தல் தொகுதிகள் - 160
- வாக்களிப்பு நிலையங்கள் - 12,314
- வாக்களிப்பு நேரம் காலை 7.00 - மாலை 4.00
- பாதுகாப்பு கடமையில் 71,000 பொலிஸார்
- மகிந்த - மைத்திரி இடையே கடும் போட்டி
- 7-வது ஜனாதிபதிக்கான தேர்தல்

02 ஆம் பக்கம் பார்க்க...






## கூட்டமைப்பின் முடிவில் எந்த மாற்றமும் இல்லை

### ★ மாவை சேனாதிராஜா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே விடுத்த அறிவிப்பில் எந்த மாற்றமும் இல்லை என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

02 ஆம் பக்கம் பார்க்க...

## அச்சமின்றி வாக்களிப்பீர்

(யாழ்ப்பாணம்)

வாக்களிக்கும் நிலையங்கள் அனைவற்றுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதனால் வாக்காளர்கள் அனைவரும் அச்சமின்றி வாக்களிக்க முடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க...

## வாக்காளர் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

(கொழும்பு)

இன்று 8ஆம் திகதி ஜனாதிபதித தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த கீழ்வரும ஆவணங்களை கொண்டு செல்லலாம்.

- தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
- ஓய்வூதியம் பெறுவோர் அடையாள அட்டை
- முதியோர் அடையாள அட்டை
- மதகுருமார் அடையாள அட்டை
- தேர்தல் திணைக்களத்தினால் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை. (செ-11)

## மைத்திரியின் ஆதரவாளர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

(யாழ்ப்பாணம்)

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

பொது எதிரணியின் தேர்தல் பிரசாரத்திற்கு என இரத்தினபுரி – கஹவத்த பிரதேசத்தில் கடந்த 05 ஆம் திகதியன்று பரப்புரைக்கு மேடை அமைத்துக் கொண்டிருந்த போது இனம்தெரியாத நபர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த கஹவத்தயைச் சேர்ந்த சாந்த டொடங்கொட (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

2 ஆம் பக்கம் பார்க்க...

## தேர்தலில் மக்கள் வாக்களிப்பதை இராணுவத்தால் தடுக்க முடியாது

### ★ தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுமக்கள் வாக்களிப்பதை இராணுவத்தினர் எந்த வகையிலும் தடுத்து நிறுத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனை தெரிவித்துள்ள அவர் இராணுவத்தினால் கூட நீங்கள் வாக்களிப்பதை தடுக்க முடியாது. அவர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக உங்களை வாக்களிக்கவேண்டாமென தடுத்தால் அதனை நிராகரிக்கும் உரிமை உங்களுக்குள்ளது என மக்களுக்கு அறிவுறுத்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

வடகிழக்கு உட்பட நாட்டின் சில பாகங்களில் வாக்களிப்பில் இராணுவம் தலையிடலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ள நிலையிலேயே தேர்தல் ஆணையாளரின இந்த கருத்துவெளியாகியுள்ளது.

கள்ளவாக்கு போடப்படுவதை தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன, மக்கள் இது

02 ஆம் பக்கம் பார்க்க...

## தமிழர் பிரச்சினைக்கே முதலில் தீர்வு அவசியம்

### — வலியுறுத்துகிறது பா.ஜ.க —

(சென்னை)

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளர் முதலாவதாக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்தியுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்களில் ஒருவரான விஜய் ஜோலி நேற்று புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்

24 ஆம் பக்கம் பார்க்க...



## ஜனாதிபதித் தேர்தல் நீதியாக நடக்கும்

(கொழும்பு)

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை அமைதியானதாகவும் நம்பிக்கைக்குரியதாகவும் நடத்தி முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதென இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள

02 ஆம் பக்கம் பார்க்க...



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் போலி வாக்குச்சீட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக சந்தேகித்து பொது எதிரணியினர் நேற்றைய தினம் அங்கு தேடுதல் நடத்தியிருந்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பிரெஞ்சு சஞ்சிகை அலுவலகம் மீது துப்பாக்கிதாரிகள் திடீர் தாக்குதல்

## 12 பேர் பலி

பிரெஞ்சின் நகைச்சுவை இதழான **சார்லி ஹெப்டோவின்** அலுவலகம் மீது முகமூடி அணிந்த துப்பாக்கிதாரிகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மேலும் ஐந்து பேர் பலத்த காயமடைந்திருக்கின்றனர்.

பாரிசிலிருந்து வெளிவரும் இந்த சஞ்சிகை கடந்த காலங்களில் இஸ்லாமியவாதிகளால் இலக்குவைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல் உள்ளூர் நேரப்படி நேற்று காலை நடந்தது. முகமூடி அணிந்த ஆயுததாரிகள் அலுவலகக் கட்டிடத்திற்குள் நுழைந்து தானியங்கி ஆயுதங்களை வைத்து சுடத்தொடங்கினர்.

குறைந்தது 50 குண்டுகள் சுட்டுத்தீர்க்கப்பட்டன என்று செய்திகள் கூறுகின்றன.

தாக்குதலை நடத்தியவர்கள் பின்னர் ஒரு காரில் தப்பியோடிவிட்டனர்

கொல்லப்பட்டவர்களில் இருவர் பொலிஸ் அதிகாரிகள்.

தாக்குதலை நடத்திய துப்பாக்கிதாரிகள் இறைதூதரை நிந்தித்தற்கு பழி தீர்த்துவிட்டோம் என்று கூக்குரல் எழுப்பியதாகப் பொலிஸார் கூறினர்.

சம்பவ இடத்தை பார்வையிட்ட பிரெஞ்சு அதிபர் பிரான்சுவா ஒலோந்து இந்த சஞ்சிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலை மிகக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கை என்று வர்ணித்தார். பிரெஞ்சுக் குடியரசால் உரிமைகளும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்ட ஊடகவியலாளர்களை பயங்கரவாதிகள் கோழைத்தனமாக கொன்றிருக்கிறார்கள் என்று அவர் கூறினார்.

வேறு பல பயங்கரவாதத் தாக்குதல்கள் சமீப வாரங்களில் தடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஒல்லோந்து கூறினார்.

தாக்குதலை நடத்தியவர்களைப் பிடிக்க பெரும் பொலிஸ் நடவடிக்கை ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது.

பிரெஞ்சுத் தலைநகர் முழுவதும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

தாக்குதலுக்குள்ளான பிரெஞ்சு சஞ்சிகையான, சார்லி ஹெப்டொ ஒரு வார இதழ். இது டென்மார்க் பத்திரிகையொன்றில் முதலில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்திய இறைதூதர் முகமது நபி குறித்த கேலிச் சித்திரங்களை 2006ம் ஆண்டில் மறு பிரசுரம் செய்து சர்ச்சைக்குள்ளானது.

கடந்த 2011ம் ஆண்டில், ஷாரியா ஹெப்டோ என்ற தலைப்பின் கீழ், இறைதூதர் முகமது நபியின் கேலி சித்திரம் ஒன்றை பிரசுரித்த பின்னர், இந்த சஞ்சிகையின் அலுவலகங்கள் தீக்குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாயின.

அடுத்த ஆண்டில், பல நாடுகளில் இன்னசன்ஸ் ஒப் முஸ்லீம்ஸ் என்ற படம் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருந்த சூழலில், இந்த சஞ்சிகை முகமது நபியை நிரவாணமாகக் காட்டும் படங்களை பிரசுரித்தது.

பிரெஞ்சின் இனவெறிக்கெதிரான சட்டங்களின் கீழ் இதற்கெதிராக வழக்கு தொடரபபட்ட நிலையிலும், சார்லி ஹெப்டோ சர்ச்சைக்குரிய கேலிச்சித்திரங்கள் பலவற்றை தொடர்ந்தும் பிரசுரித்து வந்தது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இராணுவ முகாம் அருகில் ஐ.தே கட்சியினர் தேடுதல்

(கொழும்பு)

பனாங்கொட இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வீடொன்றை ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

இந்த தேடுதல் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

போலியான வாக்குசீட்டுக்களும் போலியான பெட்டிகளும் இருப்பதாக தெரிவித்தே இந்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் அங்கிருந்த எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் மஞ்சு அரங்கல உட்பட்டவர்களே ஸ்ரீ கோத்தாவில் இருந்து புறப்பட்டு சென்று இந்த தேடுதலை நடத்தினர்.

இதன்போது போலி வாக்குச்சீட்டுக்கள் இல்லாதபோதும் சில சந்தேகப்படக்கூடிய தடயங்கள் காணப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சில சந்தேகத்துக்குரிய பொருட்கள் இருப்பதாக கூறி எதிரணியினர் நடத்திய தேடுதலை அடுத்தே பனாங்கொட தேடுதலும் நடத்தப்பட்டுள்ளது. (செ-11)

## ஜனாதிபதித் தேர்..

கருத்துக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு இவ்வாறு கூறியுள்ளது.

1931-ம் ஆண்டிலிருந்து இது வரை இலங்கையில் நடத்தப்பட்ட தேர்தல்கள் நீதியானதும் சுதந்திரமானதுமாக நடத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, இன்று நடைபெறவுள்ள தேர்தலில் மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கவென வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(செ-11)

## மைத்திரியின்...

கஹவத்தையில் நடைபெறவிருந்த பொது எதிரணி தேர்தல் பிரசாரத்திற்கென மேடை அமைத்துக் கொண்டிருந்த போதே, இனந்தெரியாதவர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தனர்.

இதில் படுகாயமடைந்தவர்களில் ஒருவரான டொடங்கொட சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இத்துப்பாக்கித் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரதி அமைச்சர் பிரேம்லால் ஜயசேகர, சப்ரகமுவ மாகாண சபையின் உறுப்பினர் அருண நிலந்த ஜயசிங்க மற்றும் கஹவத்தை பிரதேச சபையின் தலைவர் வஜிரசில்வா ஆகியோரை கைது செய்யுமாறு பெல்மடுல்லை நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும் தேர்தல் வன்முறையினால் ஏற்பட்ட முதலாவது உயிரிழப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தேர்தலில் மக்கள்...

குறித்து அச்சமடையத் தேவையில்லை மக்களை தவறாக வழி நடத்துவதற்காக சில குழுக்கள் தவறான முடிவுகளை வெளி யிட முயல்வதாக அறிகின்றோம், தேர்தல் திணைக்களத்தால் வெளியிடப்படுபவை மாத்திரமே உண்மையான முடிவுகள், வாக்குகள் எண்ணப்படுவது நேர்மையாக இடம் பெறுவதை உறுதிசெய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சகல வாக்குப்பெட்டிகளும் வாக்குகள் எண்ண்ணப்படும் நிலையங்களுக்கு சென்றுவிட்டன, பிரச்சினைகள் எதுவுமில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வாக்குகள் எண்ணப்படுவது 7 மணிக்கு ஆரம்பமாகும்.

வடபகுதியில் வாக்களிப்பை குழப்புவதற்கு இராணுவத்தை அனுப்பியுள்ளதாக வெளியான தகவல்கள் குறித்து விசாரணை செய்துவருகிறேன்.

சில அரசியல்வாதிகள் நாட்டை விட்டு தபபிச் சென்றுள்ளனர், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு உள்ளனர் போன்ற பொய்யான தகவல்களை ஊடகங்கள் வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்,

சிலரின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக சுவரொட்டிகள, துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# இன்று ஜனாதிபதித் தேர்தல்...

தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதித் தேர்தல் நாடளாவிய ரீதியில் இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

நாட்டின் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் தேர்தலாக இது உள்ளமையினால் வாக்காளர்கள் அனைவரும் தவறாது வாக்களிக்குமாறு பல்வேறுபட்ட தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பலமான இரு வேட்பாளர்களுடன் நடைபெறுகின்ற இரண்டாவது தேர்தல் என்பதனாலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பலத்த எதிர்பார்ப்பினைத் தோற்றுவித்துள்ளது.

வாக்களிப்பிற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் நேற்று நள்ளிரவுடன் பூர்த்தியாகியுள்ளன. இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 50 இலட்சத்து 44 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார்ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் ஏழு லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் அதிகளவிலான 16 இலட்சத்து 37 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். கொழும்பிலில் 15 இலட்சத்து 86 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 12 ஆயிரத்து 314 வாக்களிப்பு நிலையங்களும் வடக்கு மாகாணத்தில் 955 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெறவுள்ளது. பாதுகாப்பு கடமைகளிற்காக 71 ஆயிரம் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 420 தற்காலிக வீதித் தடைகள் தேர்தலை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் இவை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை அமுலில் இருக்குமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

பிரதான தேர்தல் நிலையங்களிலிருந்து வாக்களிக்கும் நிலையங்களிற்கு நேற்றைய தினம் வாக்குப்பெட்டிகள் அந்தந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நீதியான தேர்தலை உறுதிப்படுத்துதற்கு இந்தியா. நேபாளம் உட்பட சர்வதேச கண்காணிப்புப்பாளர்களும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் களமிறங்கியுள்ளன.

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக காணப்படுவதனாலும் சர்வதேச ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் வடகிழக்கு உட்பட இலங்கையின் அனைத்து இடங்களிலும் முகாமிட்டுள்ளனர்

எனினும் இலங்கையின் போர்க்குற்றக் காணொளிகளை வெளிக் கொணர்ந்த சனல் 4 ஊடகத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நீதியான அமைதியான தேர்தல் நடைபெறுவதற்கு வாக்காளர்கள், கட்சித் தொண்டர் கள் ஒத்துழைக்கு வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய கேட்டுக் கொண்டுள்ளார்.

வாக்காளர்கள் காலையிலேயே சென்று வாக்களிப்பதன் மூலம் மோசடிகளினை தவித்துக் கொள்ள முடியுமெனவும் வாக்களிப்பதில் ஏதும் தெளிவின்மை காணப்பட்டால் தேர்தல் கடமையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடம் கேட்டு வாக்களிக்க முடியுமெனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் எதிர்கால தலைவிதியினை தீர்மானிக்கும் தேர்தலாக உள்ளதனால் அனைத்து வாக்காளர்களும் தவறாது வாக்களிக்குமாறு பல தரப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

19 வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள நிலையிலும் பலம்மிக்க வேட்பாளர்களில் பொது எதிரணியின் வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன அன்னச் சின்னத்திலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷ வெற்றிலைச் சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்

தேர்தல் வன்முறைகளினைப் பொறுத்தவரையில் கஹடவத்தையில் பொது எதிரணியின் ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

எனினும் வாக்களிப்பின்போது எவ்வித வன்முறைகளும் ஏற்பட வாய்ப்பில்லை எனவும் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியுமென பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த 2010 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 40 இலட்சத்து 500 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த நிலையில் 74.49 வீதமானோர் வாக்களித்திருந்தனர் எனினும் இந்த முறை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பதற்கு மக்கள் ஆர்வமாக உள்ளனர் எனவும் கடந்த முறையினை விட இம்முறை வாக்களிப்பு வீதம் அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-4)

## கூட்டமைப்பின்...

தொடர்பில் போலியான துண்டுப் பிரசுரங்கள் அச்சாகி, மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படவுள்ளதாக அறிய வந்துள்ளது.

எனவே போலியான துண்டுப் பிரசுரங்கள் பற்றி கவனஞ்செலுத்த வேண்டாம் எனவும்,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் ஏற்கெனவே விடுத்த வேண்டுகோளில் எந்த மாற்றமும் இல்லை என்றும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார். (ந)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சீ-9671)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும்



## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலின் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்தள்ளார்.**

தேர்தல் கடமைகளின் போது பொலிஸார் எவ்வாறு உதவி கோருகின்றார்களோ அவ்வாறான உதவிகள் வழங்கப்படும்.


வடக்கின் பாதுகாப்பு முழு அளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக பாதுகாப்புப் படையினரைப் போன்று அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வேறு தரப்பினர் எவருமில்லை.

ஜனநாயகத்தையும் தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்ய படையினர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவர் என இராணுவத் தளபதி தயா ரட்நாயக்க உறுதியளித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேற்று தேர்தல் பாதுகாப்பு குறித்து கருத்து வெளியிட்ட போது இதனைக் தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவுக்கு சஜித் கடிதம்



(கொழும்பு)

தனக்கு எதிராக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் தொடர்பில் ஊடகங்களூடாக பொதுமக்களுக்கு விளக்கமளிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவல் சஜித் பிரேமதாச, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கே சஜித் பிரேமதாச ஆதரவு வழங்கவுள்ளார் என்றும் அன்னம் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் குறிப்பிட்டே அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இது தனக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையாகவே காணப்படுகின்றது. இது தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள் என்று, தேர்தல் ஆணையாளரிடம் சஜித் பிரேமதாச கோரியுள்ளார்.

இது தொடர்பில் மஹிந்த தேசப்பிரியவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள அவர், இவ்வாறானதொரு நடவடிக்கையால் தன்னுடைய அரசியல் வாழ்க்கைக்கும் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்கும் தடை ஏற்பட்டுள்ளது" என சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் அனைவரும் விடுதலை

மாலைதீவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சகல இலங்கை யர்களையும் விடுதலை செய்ய அந்நாட்டு அரசாங்கம் நேற்று தீர்மானித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லெண்ணத்தை வளர்க்கும் நோக்கில் மாலை தீவு அரசாங்கம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 பேர் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

மாலைதீவு அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைவாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அந்நாட்டு ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது. இந்த தீர்மானம் குறித்து இலங்கை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## தனியார் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குங்கள்

இன்று தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் வாக்களிப்பதற்காகவே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-5)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வேலுப்பிள்ளை மோகனநாதன்
(SLPS-I, முன்னாள் அதிபர்)

மண்ணகம் 24.04.1952 — விண்ணகம் 03.01.2010

யா/ அராலி இந்துக் கல்லூரி

திதி- அபரபட்ச திருதியை (08.01.2015)

வருடம் ஐந்து சென்றதோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம்
ஆனாலும் உங்கள் பாசநினைவலைகள்
எம் நெஞ்சை விட்டு நீங்காது

கலைநகர், வட்டு- வடக்கு,
சித்தன்கேணி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(9080)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1958.10.07 — இறப்பு 2006.01.08

அமரர் சின்னராசா ராசையா
(சித்தப்பா பேக்கரி உரிமையாளர்)

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குல விளக்கே!
எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய எம்
அன்புத் தெய்வமே!
எத்தனை கோடி இன்பங்கள் இருந்தாலும்
அது அத்தனையும் நீங்களாகுமா?

எம் வாழ்வில் என்றும் உங்கள் துணை தொடர
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

V.M. வீதி, சின்னப்பிள்ளையார் கோவிலடி,
பருத்தித்துறை.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்.

(9059)

## இராசி பலன்

08.01.2015
(மார்கழி 24, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
திருதியை பிற்பகல் 3.43 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 4.25 மணிவரை
இராகுகாலம் 2.02-3.32 மணிவரை
சுபநேரம் 8.02-9.32 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்:** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் சுமூகமாக இருக்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்

**இடபம்:** சொத்துக்களால் ஆதாயமுண்டு, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்:** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் எடுப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மனதில் இனம் புரியாத கற்பனைகள் தோன்றி மறையும்.

**சிம்மம்:** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, விருந்தினர் வருகையால் சுப செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம்.

**கன்னி:** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், செல்வ நிலை உயர வழி வகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், அழகு சாதனப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், [illegible]த்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் பயணங்கள் [illegible] ண்டு.

**தனுசு:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

**மகரம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், குடும்பத்திற்கிடையே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது, மாலை நேரத்தில் சில மனக்குழப்பம் ஏற்படலாம்.

**கும்பம்:** மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்:** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நீண்ட நாட்களாக திட்டமிட்ட காரியமொன்று இன்று கைகூடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

குரு சீடனிடம் ஒன்பது முறை திரும்பத் திரும்பச் சொல்கிறார். தத்த்வம் அஸி- நீயே அதுவாக இருக்கிறாய். வெறுமனே கேட்பதன் மூலம், குரு சொல்வதை இருப்புத் தன்மையிலிருந்து வெறுமனே கேட்பதன் மூலம், சீடன் உண்மையிலேயே ஆன்மீக அனுபவத்தை அடைகிறான்! குரு சீடன் இருவருமே முழுமையுடன் செயற்படும் பொழுது இது சாத்தியமாகிறது.

நீங்கள் ஒரு குருவைச் சுற்றியிருக்கும்பொழுது வார்த்தைகளுக்கு முழுமையான முக்கியத்துவம் கிடையாது. ஒரு குருவைச் சுற்றியிருக்கும் பொழுது வெறுமனே அமைதியாக அவரை கிரஹித்துக் கொள்ளுதலே உங்களிடம் ஒரு உண்மையான உருமாற்றத்தைக் கொண்டு வரும். ஆனால், என்ன செய்வது? நீங்கள் உங்கள் உள்பேச்சில் நன்றாகச் சிக்கிக் கொண்டிருப்பதால், எனக்கு உங்களை ஊடுருவிச் செல்வது சாத்தியமற்றுப் போய்விடுகிறது. அதனால் நான் பேசுகிறேன். நான் வார்த்தைகளை உபயோகப்படுத்தி உங்களை அமைதியில் ஆழ்த்துகிறேன்.

நான் எதற்காக உங்களிடம் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்கள்? ஏனெனில், நான் பேசவில்லையெனில், நீங்கள் உங்களுக்குள் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பீர்கள்- இறந்த காலத்தைக் கூறுபோட்டு ஆராய்ந்து கொண்டும், எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டும், முடிவெடுத்துக் கொண்டும், எடைபோட்டுக் கொண்டும் இன்னும் பலவும் செய்து கொண்டிருப்பீர்கள். நான் பேசும்பொழுது நீங்கள் தவற விட்டுவிடும் பயத்தில் என் வார்த்தைகளில் இலயித்திருக்கும் நேரத்தை நான் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு உங்களுக்குள் நுழைந்துவிடுவேன்!

நான் பேசும் பொழுது உண்மையில் நான் உள்ளே அமைதியாகத்தான் இருக்கிறேன். பாருங்கள்... ஒரு குரு பேசும் பொழுது உண்மையிலேயே அவருக்குள் அமைதிதான் நிலவுகிறது. அதனால்தான் அவர் குருவாக இருக்கிறார்! ஆனால், உங்கள் நிலையிலோ, நீங்கள் மௌனமாக இருக்கும் பொழுதும் உள்ளுக்குள் பேசிக்கொண்டுதான் இருக்கிறீர்கள். உள்பேச்சு இருந்துகொண்டிருக்கும். அதுதான் வித்தியாசம். உங்கள் மௌனம் என்பது வழக்கமாக உங்களுக்குள் நிகழும் கேட்க முடியாத வெறும் பேச்சுதான். உங்களுக்குள் நீங்கள் ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளிற்கு எந்த வித சம்பந்தமுமின்றி ஒரு குரங்கு போல தாவிக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரி உங்களுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும்பொழுது நீங்கள் வெளியே அமைதியாக இருப்பது போல் காட்சியளிக்கிறீர்கள், அவ்வளவே.

அதனால் வெறுமனே எவ்வாறு கேட்பது என்று தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் தலையால் கேட்காதீர்கள். உங்கள் இருப்புத் தன்மையை எனக்குத் திறவுங்கள். *(தொடரும்)*

**ஆன்மீகம் 122**

## கவலைகள் இன்றி வாழ்தல்!



**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

அமெரிக்காவில் விஞ்ஞானி நிகழ்த்திய அதிசயம்

ஒரு மரத்தில் 40 வகையான பழங்கள்

ஒரே மரத்தில் 40 வகையான பழங்களை உருவாக்கி அமெரிக்க விஞ்ஞானி சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சைரகஸ் பல்கலைக்கழகத்தில் சாம் வான் அகேன் தாவரவியல் பேராசிரியராக உள்ளார். விஞ்ஞானியான சாம்வான் அகேன் மரத்தில் பல்வேறு வகையான பழங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.



இந்த முயற்சி எப்படி என்றால் "ஒட்டு மாங்கனி' என்ற முறையை பயன்படுத்தப்படுத்தி புளிப்பான மரத்தின் தண்டில், இனிப்பான மாம் பழத்தின் தண்டை ஒட்ட வைத்து சிறிது நாளில் புளிப்பான மாம் பழத்தை இனிப்பாக மாற்றுவர் அதேபோல் தான் இவரும் ஒரே மரத்தில் பல்வேறு மரங்களின் தண்டுகளை படிப்படியாக இணைத்தும், சில மாற்றங்களை செய்தும் வளர்த்தார்.

தற்போது அந்த மரத்தில் 40 வகையான பழங்கள் காய்த்து தொங்குகின்றன. இந்த காட்சி அங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அழகான அந்த மரம் அனைவரையும் அருகில் ஈர்க்கும் வண்ணம் காட்சியளிக்கிறது.

இது குறித்து சாம் வான் அகேன் கூறுகையில், என்னுடைய ஆராய்ச்சியின் பயனாக, அம்மரத்தை குளிர் காலத்தில் பார்ப்பவர்களுக்கு செம்பழுப்பு, ஊதா மற்றும் வெள்ளை என வானவில்லை போல் காட்சியளிக்கும் என்றும், கோடை காலத்தில் அம்மரம் பல்சுவை கொண்ட பழங்களை வழங்குவதாகவும் இதுபோன்ற தாவர ஆராய்ச்சியை தான் இனி அதிகமாக மேற்கொள்ளவுள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## தேங்காய் லட்டு



**தேவையான பொருட்கள்**

தேங்காய் - 2 கப் (துருவியது)
கண்டென்ஸ்டு மில்க் - 2 கப்
சர்க்கரை - 1 கப்
ஏலக்காய் - 1 டீஸ்பூன்
பாதாம் - 4-5
வெண்ணெய் - 1 டீஸ்பூன்

**செய்முறை**

முதலில் ஒரு அகன்ற பாத்திரத்தில் பாலை ஊற்றி 10 நிமிடம் கொதிக்க விட வேண்டும். குறிப்பாக அப்படி கொதிக்கும் போது அவ்வப்போது லேசாக கிளறி விட வேண்டும். பின்னர் அதில் துருவிய தேங்காய் சேர்த்து, நன்கு கிளறி 10-15 நிமிடம் குறைவான தீயில் கொதிக்க விட வேண்டும். பின்பு அதில் சர்க்கரையை சேர்த்து, சர்க்கரை கரையும் வரை கிளறி விட்டு, பின் அதில் ஏலக்காய் பொடி சேர்த்து கிளறி இறக்கி விட வேண்டும். கலவையானது மிதமான சூட்டில் இருக்கும்போது, கையில் வெண்ணெய் தடவி, அதனை லட்டுகளாக பிடித்து, ஒவ்வொன்றின் மீது பாதாமை வைத்தால், சுவையான தேங்காய் லட்டு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணியிடமிருந்து எதிர்பாராத சவாலை சந்திக்கிறார் மகிந்த

## சர்வதேச ஊடகம் சுட்டிக்காட்டு

இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிரணி ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து எதிர்பாராத சவாலை எதிர்கொள்வார் என்று சர்வதேச ஊடகமான அல்ஜெசீரா தெரிவித்துள்ளது.

அத்துடன் மைத்திரிபால சிறிசேனவை தேர்தலில் களமிறக்கியுள்ள எதிரணியும் ஜனாதிபதிக்கு பாரிய சவாலை கொடுத்துள்ளது என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு பாரிய வெற்றியை பெற்றபோதும் அவர் இலங்கையில் சிறுபான்மையினர் தொடர்பில் நல்லிணக்கத்தை கொண்டு வருவதில் தோல்வி கண்டுள்ளார்.

பதிலாக 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் அவரின் ஆட்சியில் ஊழல்களும் துஷ்பிரயோகங்களுமே மலிந்திருந்ததாக விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் ஆய்வாளர் விக்டர் ஜவனின் கருத்துப்படி மகிந்த ராஜபக்ஷ நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளார்.

அதிவேக பாதைகள், பாதை விஸ்தரிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. எனினும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் யாழ்ப்பாணத்தில் பிரசாரம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரியாத தேவதையான மைத்திரிபாலவை விடுத்து 'தெரிந்த பிசாசான தமக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இரண்டு வருடகால பதவி இருக்கின்ற போதும், ஜனாதிபதி தாமே முன்வந்து தேர்தலுக்கு அழைப்பு விடுத்து அதில் இறுகிப் போயுள்ளதாக இலங்கையின் ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-5)

## ஐ.தே.க உறுப்பினரின் 2 வாகனங்களுக்கு தீ

ஹொரனை பிரதேச சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் அஜித் நவகமுவ என்பவரின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் இரண்டு நேற்றுக்காலை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிலொரு வாகனம் அவருடையது என்றும் மற்றொன்று நண்பருடையது என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## வாக்குப் பெட்டிகள் தாமதம்

தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற உணவுக்கான கொடுப்பனவு கிடைக்காமையினால் இலங்கை போக்குவரத்து சபையின் குருநாகல் டிப்போ ஊழியர்கள் 168பேர் மூன்று மணிநேரமாக பணிப் பகிஷ்கரிப்பை நேற்றுக் காலை மேற்கொண்டனர். இதனால், வாக்குப்பெட்டிகளை எடுத்து செல்லும் நடவடிக்கை மூன்று மணி நேரத்துக்கு தாமதமானது.

இந்நிலையில், தேர்தல்கள் கடமைகளில் ஈடுபடுவோருக்கு உணவுகளை வழங்கும் அதிகாரியான வடமேல் மாகாண சபையின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் புவனகே ஹேரத் தலையிட்டு இந்த பிரச்சினையை தீர்த்துவைத்தார். (இ-5)

## கடற்படையினரின் அச்சுறுத்தலால் 1000 தமிழக படகுகள் கரைதிரும்பின

தமிழக மீனவர்களை இலங்கையின் கடற்படையினர் பயமுறுத்தி விரட்டிய சம்பவம் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் காலை கச்சதீவு பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தமிழக மீனவர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.


தமது மீனவர்களை பயமுறுத்திய இலங்கையின் கடற்படையினர் கரை திரும்புமாறு உத்தரவிட்டதாக இராமேஸ்வரம் மீனவர்களின் சம்மேளன தலைவர் எஸ் எமீரிட் தெரிவித்துள்ளார்.

இதன்போது இலங்கை கடற்படையினர் 20 படகுகளையும் வலைகளையும் நாசப்படுத்தியதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாக சுமார் 1000 படகுகள் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் கரை திரும்பியதாகவும் எமீரிட் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் வன்முறைகளில் ஈடுபடவுள்ளன

### தேசிய சுதந்திர முன்னணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் இன்று இடம்பெறும் நிலையில் வாக்குச்சாவடிகளுக்கு அருகில் வன்முறை செயல்களை மேற்கொள்ள ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியும் திட்டமிட்டுள்ளதாக தெரியவருவதால், அது குறித்து தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு தெளிவுபடுத்த உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க, இது குறித்து பொலிஸ்மா அதிபரும் அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பது அவர்களின் கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## அறைகளை திறக்குமாறு எதிரணியினர் கோரிக்கை

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்திலுள்ள கட்டடத்தில் பூட்டப்பட்டு கிடக்கின்ற நான்கு அறைகளை திறந்து சோதனைகளை நடத்துமாறு எதிரணியினர், பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூட்டப்பட்டிருக்கின்ற நான்கு அறைகளில் பெருந்தொகையான வாக்குச்சீட்டுகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன என்று எதிரணியினர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர். மண்டப வளாகத்துக்கு சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, கரு ஜயசூரிய, ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க மற்றும் அத்துரலிய ரத்னதேரர் அங்கிருக்கும் பொலிஸாரிடமே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர். (இ-5)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 36 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA, MSC, MBA/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/025 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 71 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA, CIMA/ கணக்காளர்<br>தொ.இ: G/048 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 7 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L முகாமையாளர்<br>தொ.இ: B/030 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 62 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/049 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் ( டோகா)<br>தொ.இ: B/031 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 37 சூரிசெவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/051 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 30 1/2 சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L/ (லண்டன் PR)<br>தொ.இ: B/037 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/053 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



சுழிபுரம்- பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

**சமாதான அரணில் இருந்து ஓர் குரல்**

நாட்டில் எது எவ்வாறு நடப்பினும் நாட்டைக் காக்க வேண்டியது அனைத்து மக்களின் தலையாய கடமையாகும். எனவே இந்து சமுத்திரத்தின் முத்து என்ற சிறப்புடைய எமது வளமான அழகான தாய் நாட்டை அனைத்து மக்களும் இனபேதமின்றி, மதபேதமின்றி, அரசியல் கட்சி பேதமின்றி அமைதிகாத்து நாட்டைப் பாதுகாப்போமாக.

சோழியூரான் பிறை சூடிக் குருக்கள் [illegible] (ஆதீனகர்த்தரும் சந்ததிப் பூசகரும்)

(9085)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சின் உதவியுடன் நெடுந்தீவிலிருந்து வாக்கு வரும்

(யாழ்ப்பாணம்)


நெடுந்தீவில் அளிக்கப்படுகின்ற வாக்குகள் வாக்கெண்ணும் நிலையத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் உதவியுடனேயே கொண்டு வரப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட தீவுகளில் ஒன்றான நெடுந் தீவில் தனியொரு வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அங்குள்ள மக்கள் அங்கேயே வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இங்கு அளிக்கப்படுகின்ற வாக்குகள் எவ்வாறு வாக்கெண்ணும் பிரதான நிலையமான யாழ்.மத்திய கல்லூரிக்கு கொண்டு வரப்படும் என யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு நேற்று முன்தினம் மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெடுந்தீவிற்கான வாக்குகள் கடல் மூலமாகத்தான் வாக்கெண்ணும் நிலையத்திற்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் திடீரென கடற்கொந்தளிப்பு ஏற்பட்டால் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந் நடவடிக்கைகளினை பாதுகாப்பு அமைச்சே முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ-4)




# தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள் யாழ்ப்பாணத்திலும் பகிர்ந்தளிப்பு





**(யாழ்ப்பாணம்)**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வாக்களிக்கும் நிலையங்களிற்கு நேற்றுக் காலை 8 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்திலுள்ள 4 இலட்சத்து 50 ஆயிரத்து 132 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு 526 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் 526 வாக்களிப்பு நிலையங்களிற்கே யாழ். மத்திய கல்லூரியிலிருந்து வாக்குப் பெட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.**

வாக்குப் பெட்டிகள் பகிர்ந்தளிப்பிற்கு தனியார் மற்றும் அரச பேருந்துகளில் 400 பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

வாக்குப் பெட்டிகள் அனைத்தும் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை யாழ். மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெற்றதோடு வாக்குப் பெட்டிகள் தேர்தல் திணைக்களத்தினரால் உரிய அடையாளமிடப்பட்டும் பாதுகாப்புடனும் அனுப்பி வைக்கப்பட்டன.

இவற்றோடு வாக்குச்சீட்டு மற்றும் உரிய ஆவணங்கள் என்பனவும் வாக்களிப்பு நிலையங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தேர்தல் கடமையில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுடன் நேற்றுக் காலை கலந்துரையாடியதாகவும் நீதியான, அச்சமில்லாத தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் கிளிநொச்சி வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களிற்கான வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்கு சீட்டுக்கள் நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களிற்கான பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# கொடிகாமம்- கச்சாய் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

கொடிகாமம் கச்சாய் வடக்கு ஜே-324 கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கொடிகாமம்-கச்சாய் வீதி நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் உள்ளதால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாலாவி, தவசிகுளம் பகுதி மக்களும் இறுதிக் கிரியைக்காக பாலாவித்தல் இந்து மயானத்திற்கு செல்வதற்காக இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதிக்கு அருகாமையிலுள்ள ஒட்டங்கேணிபிள்ளையார்கோவில் வீதியும் கற்கள் நிறைந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலையிலுள்ளது.

எனவே இந்த வீதிகளை செப்பனிட்டு தர உரிய அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டுமென அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-283)

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலினை கண்காணிப்பதற்கென யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள சர்வதேசகண்காணிப்பாளர்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தினை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தேர்தலுக்கான ஏற்பாடுகள் வாக்களிப்பு, வாக்கெண்ணும் நிலையங்கள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவை தொடர்பிலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அரச அதிபரிடம் கேட்டறிந்து கொண்டுள்ளனர்.




நேற்று முன்தினம் யாழ். வருகை தந்த இரு கண்காணிப்பாளர்களும் இந்தியாவினை சேர்ந்தவர்கள் எனவும் இன்றும் யாழ். மாவட்டத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு நிலையங்கள், வாக்கெண்ணும் நிலையங்கள் என்பவற்றினையும் இவர்கள் நேரில் சென்று பார்வையிடவுள்ளதோடு திருப்திகரமான முன் னேற்பாடுகளையும் மேற்கொள் ளவுள்ளனர்.

இதே வேளை ஏற்கனவே நேபாளம் உட்பட ஆசிய கண்காணிப்பாளர்கள் மன்னார், வவுனியா மாவட்டங்களில் கண்காணிப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய கண்காணிப்பாளர்களான ஒஜா, கோவிந்த் ஆகியோரே இந்தக் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

### க.பொ.த. உ/த பெறுபேறுகள்
### யாழ்.செங்குந்தா இந்துக்கல்லூரி

*கலைப்பிரிவு*

ஜெ.சிந்துஜா 2ஏபி, மு.சியானி 2ஏபி, தே. நிதர்சன் ஏ2பி, பா. போத நிலாஞ்சலி ஏ2பி, தே.சுவேந்தா ஏபிசி, சி. தாரகா ஏபிசி, இ.அனுசியா 2பிசி, பி.சூரியதாஸ் 2பிசி, ஜீசஜீவன் 2பிஎஸ், ஜெ.வளர்மதி பிசிஎஸ், அ. ஜீவாசுரன் 2சிஎஸ், உ. தனுஜா பிசிஎஸ், உ.அசோதன் 3சி, கு.சுகன்ஜா பி2சி, அ.தயாழினி பிசி எஸ், செ. சர்மினி 2சிஎஸ், ப.யாழினி பிசிஎஸ்

### 2015 ஆம் ஆண்டிற்கான புதிய அனுமதி தொடர்பானது

இலங்கை உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனமானது உயர்தேசிய டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. எமது நிறுவனத்தில் நடைபெறுகின்ற கற்கை நெறிகளுக்கான (Courses-HNDA, HNDM, HNDIT,HND in English, HNDE, HNDTHM) 2015 ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய அனுமதிகளுக் கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியானது எதிர் வரும் 15.01.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். (இ

# பல்கலைக்கழக கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் தாதியர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தர விஞ்ஞான, கணிதப்பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்தவர்கள் அல்லது பொதுத் தாதியர் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தாதியர் பாடசாலையினால் வழங்கப்பட்ட தாதியர் டிப்ளோமா சான்றிதழ் மற்றும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட முதல் நியமனக் கடிதத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது வெளி நாட்டு மற்றும் இலங்கை சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கல்வி நிறுவனங்களினாலேனும் வழங்கப்பட்ட 3 வருட டிப்ளோமா மற்றும் குறைந்தது இரண்டு வருட தாதியர் சேவை அனுபவம் இருப்பவர்கள் அத்துடன் கணித, விஞ்ஞானப்பிரிவில் மூன்று பாட சித்தி அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தி னால் நடத்தப்படும் தாதியர் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை இலங்கை திறந்த பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் மருந்தாளர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை மருந்துவ சங்கத்தினால் மருந்தாளராக பதிவு செய்திருப்பதோடு பதிவின் பின்னரான 2 வருடமுன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் 3 பாடங்களில் இரசாயணவியலில் சி உள்ளடங்கலாக சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கைதிறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கைநெறியில் இரசாயனவியலில் பி சித்தியினைப் பெற்று பூர்த்தி செய்தவர்களாக இருப்பதுடன் எமது தகுதிகாண் தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

அத்தோடு இலங்கை திறந்த பல்கலைக்கழக சுகாதார விஞ்ஞான பிரிவினால் விஞ்ஞான ஆய்வுகூட ஆய்வாளர் பட்டப்படிப்பியலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை மருத்துவ சங்கத்தினால் விஞ்ஞான ஆய்வு கூட ஆய்வாளராக பதிவு செய்திருப்பதோடு 3 வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அத்திவாரக் கற்கை நெறியில் இரசாயணவியலில் சி சித்தியினை பெற்று பூர்த்தி செய்தவர்களாக இருப்பதுடன் எமது தகுதிகாண் தெரிவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை எதிர் வரும் 31 ஆம் திகதிவரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கே.கந்தவேல் அறிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவின் கனவு ஆற்றுகை விமர்சனம்

**யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட நுண்கலைத்துறை மாணவர்களால் நினைவின் கனவு எனும் சமூக நாடக ஆற்றுகை கடந்த புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நாடகத்தின் கதைக்கரு எமது சமூக வாழ்வின் இன்றைய கோலங்களை, இன்னல்களை, ஏக்கங்களை தத்ரூபமாக வெளிப்படுத்துகிறது.**

போரினால் இடம்பெயர்ந்து வாழும் ஒரு குடும்பம் குடும்பத் தலைவனை இழந்த நிலையில் படுகின்ற துன்பங்கள் அரங்கில் அம்பலமாகின.

குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக மகன் மிதிவெடி அகற்றும் ஆபத்தான தொழில் ஒன்றில் இணைந்து கொள்கிறான். மிதிவெடி அகற்றும்போது அவனது நண்பன் மிதிவெடி வெடித்து இறந்து விடுகிறான். இந்த நிலையில் இவனையும் மரண நினைவுகள் உறக்கத்திலும் கனவுகளாக வருகின்றன. யமதர்மன் கொடூரமான கோலத்துடன் வந்து அவனது அமைதியான உறக்கத்தைச் சிதறடிக்கிறான். நான் இறந்தாலும் எனது மூன்று சகோதரிகளுக்கு பத்து இலட்சம் எனது நிறுவனம் கொடுக்கும். அது அவர்களுக்குப் போதும் என்று தன் நண்பனிடம் கூறுவது நெஞ்சைத் தொடுவதாக அமைந்தது. கூட்டுக் குடும்ப முறைமை சிதைந்து தனிக் குடும்பமாகபுதியவீடுதேடும்நிலைமை இவர்களின் மூத்த மருமகனால் உருவாகிறது. இந்நிலையில் இவ்விளைஞனின்திருமணமாகாதஇளைய சகோதரி கையடக்கத் தொலைபேசியின் தவறான பாவனையால் சீரழிந்து பின் மீண்டும் படிக்க ஆரம்பிப்பது நல்லதோர் தீர்வாக அமைகின்றது. இக்குடும்பத்தில் தாய் தன் இறந்து போன கணவனின் நினைவுகளுடன் வாழுகிறாள். அவன் ஆவி வந்து அடிக்கடி அவளுடன் உரையாடுவது போல அவளது வாழ்வு கழிந்து செல்கிறது.

இந்த நாடகக்கதை சமகாலப் பிரச்சினைகளை சோக உணர்வுடன் சித்திரிக்கிறது. எனினும் இக்கதையில் இடையிடையே வருகின்ற கந்தையா, செல்லையா எனும் இரு பாத்திரங்கள் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் பாத்திரங்களாக காட்சிகளின் இடையிடையே மண்டபத்தில் சிரிப்பொலியின் அதிர்வுகளை ஏற்படுத்தின. இப்பாத்திரங்களின் உரையாடல்கள் ஊடாக போதைப் பொருள் பாவனை, வீதிப்பாதுகாப்பு, பொலிஸ், டெங்கு ஒழிப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகள் சமூக கல்வியாக அமைவதுடன் நகைச்சுவை இழையோட அலசப்பட்டன. வலியச் சண்டைக்குப் போய் அடிவாங்கும் வடிவேலுவின் பாணியிலான நகைச்சுவையும் பயத்தை மறைத்து போலியாக வீரம்பேசும் காட்சி மிகவும் இரசிக்கக்கூடியதாக அமைந்தது.

இந்நாடகத்தில் இனிய பாடல்கள் செவிகளுக்கு விருந்தாக அமைந்தன. கணவன் இறந்த போது மனைவி பாடும் ஒப்பாரிப் பாடலாக அமைந்த

**ஓடோடி வந்திடுவேன்– உங்கள்**
**ஒழுங்கை தெரியாது**
**பறந்தோடி வந்திடுவேன்– உங்கள்**
**படலை தெரியாது**

எனும் நாட்டார் பாடல் அடிகள் துன்ப உணர்வைப் பாய்ச்சின. இடையிடையே கதை கூறும் பாத்திரங்களாக வரும் பெண்கள் கதையின் தொடர்ச்சியை இடையிடையே கூறி நாடக வளர்ச்சிக்கு இட்டுச் சென்றனர். எல்லோரும் படுத்திருக்கின்றனர். ஒருவரும் நித்திரை கொள்ளவில்லை என்ற கதைகூறும் பாத்திரம் ஒன்றின்கூற்று இக்குடும்ப நிலையை உணர்த்தியது. காட்சிகளுக்கேற்ற வர்ண ஒளி வெள்ளம் அரங்கை நிறைத்தது.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகம் தென்னிந்தியத் தொலைக் காட்சித் தொடர்கள், சினிமாக்களின் முன்னால் எதிர்காலத்தை தொலைத்துக்கொண்டிருக்கும் இந்நிலையில் எமது தமிழ்ச் சமூகத்தின் இழப்புக்களை, பிரச்சினைகளை, ஏக்கங்களை இத்தகைய கலைப் படைப்புக்கள் வெளிக்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. இழப்பின் வலியை உணர வைத்த இந்த நாடகத்தில்பங்கேற்றமாணவர்கள், நெறியாள்கை செய்த கலைஞர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்தநாடகம் பல அரங்குகளில் மேடையேற வேண்டும். எமது கலைஞர்களின் திறமைகள் இனங்கண்டு வளர்க்கப்பட, இத்தகைய முயற்சிகள் பெரிதும் உதவும்என்பதில் ஐயமில்லை.

**இரா. ஜெயக்குமார்**
**அதிபர்**
**உடுவில் மான்ஸ்**
**த.க.பாடசாலை**

## தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிக்க சனல் 4 ஊடகத்திற்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட பிரித்தானியாவின் சனல் 4 ஊடகத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு இவ்வாறு சனல் 4 ஊடகத்திற்கு அனுமதி மறுத்துள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களைக் கூறி நாட்டுக்குள் பிரவேசித்த சனல் 4 ஊடகம், இலங்கைக்கு விரோதமான ஆவணப்படங்களை தயாரித்துள்ளது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

போலி ஆவணப்படங்களின் மூலம் அரசாங்கத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதனால் இலங்கைக்குள் பிரவேசிக்க சனல்4 ஊடகத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிப்பில் ஈடுபட அதிகளவான இந்திய ஊடகங்கள் அனுமதி கோரியுள்ளன.


ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் தேர்தல் தொடர்பில் செய்தி சேகரிக்க அனுமதி கோரியுள்ளன.

ஊடகவியலாளர்கள் ஊடக நிறுவனங்கள் பற்றி ஆராய்ந்து அதன் பின்னர் அனுமதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இலங்கைக்கு வரும் சில ஊடக நிறுவனங்கள் பாப்பாண்டவரின் இலங்கை விஜயம் தொடர்பிலான செய்தி சேகரிப்பிற்காக தொடர்ந்தும் தங்கியிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் சர்வதேச ஊடகங்கள் சிலவற்றுக்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேர்தலின் பின்னர் களநிலவரம் எதுவானாலும் திட்டமிட்டபடி பாப்பரசர் இலங்கைக்கு வருவார்



ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான கள நிலவரத்தை கருத்தில்கொண்டு பாப்பரசரின் இலங்கை வருகை குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டது. இந்நிலையில், திட்டமிட்டபடி எதிர்வரும் 13 ஆம் திகதி பாப்பரசர் பிரான்ஸிஸ் நிச்சயமாக இலங்கை வருவார் என இலங்கை கத்தோலிக்க பேரவை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

மேலும், 14 ஆம் திகதியன்று கொழும்பு, காலி முகத்திடலில் பாப்பரசரினால் நடத்தப்படும் விசேட திருப்பலி பூஜையின்போது முத்திப்பேறு பெற்ற ஜோசப் வாஸ் அடிகளாருக்கு 'புனிதர்' பட்டம் சூட்டப்படும் என்றும் பேரவை தெரிவித்தது.

கொழும்பு - 7 இல் அமைந்துள்ள 'செடக்' நிறுவன கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின்போது கத்தோலிக்கப் பேரவையின் ஊடகப் பேச்சாளரான அருட்தந்தை சிரில் காமினி பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவிக்கையில், இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமாக 13 ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் இலங்கை வருகிறார். அவர் 14 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காலிமுகத்திடலில் விசேட திருப்பலி ஆராதனையொன்றை நடத்துவார்.

இதற்காக நாடளாவிய ரீதியில் வாழும் சகல கிறிஸ்தவ மக்களும் 14 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் கூட காலிமுகத்திடலுக்கு வருகை தந்துவிட முடியும்.வருகை தரும் மக்களுக்காக விசேட சுகாதார வசதிகளும், போக்குவரத்து ஏற்பாடுகளும் தற்போது செய்யப்படுகின்றன.

பாப்பரசரின் வருகை இலங்கை வரலாற்றில் முக்கிய நிகழ்வு என்பதால் திருப்பலியில் கலந்துகொள்ள வருகை தரும் அனைவரும் ஒழுக்கமான முறையில் ஆடை அணிந்து வரவேண்டும் என்றும், திருப்பலயின்போது அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த விசேட திருப்பலியின் போது முத்திப்பேறு பெற்ற ஜோசப் வாஸ் அடிகளாருக்கு பாப்பரசரால் 'புனிதர்' பட்டம் சூட்டப்படவுள்ளது. ஆகவே, இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தை இலங்கை வாழ் சகல கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் பயன்படுத்தி திருப்பலியில் கலந்துகொண்டு ஆசி பெற வேண்டும்.

இதேசமயம் இத்திருப்பலி முடிவடைந்ததும் மாலை 4 மணியளவில் பாப்பரசர் பிரான்ஸிஸ் மன்னார் மடு மாதா ஆலயத்துக்கு செல்வார். அங்கு விசேட செப மாலை ஆராதனையிலும் ஈடுபடுவார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேர்தல் வாக்களிப்பு குறித்து அறிவுறுத்தல்

(மருதநகர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமங்களில் நேற்றைய தினம் பொது மக்களுக்கு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தகவல் ஒன்று ஒலி பெருக்கி மூலம் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சி. அமல்ராஜின் வழிகாட்டலுக்கமைவாக பல கிராமங்களிலும் ஒலிபெருக்கி மூலம் தேர்தல் குறித்த தகவல் விடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய பொதுமக்கள் அனைவரும் தமது ஜனநாயக உரிமையான வாக்குகளை இன்றைய தினம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் பயன்படுத்த வேண்டுமெனவும் காலையில் நேர காலத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் பொது மக்கள் தேர்தலில் வாக்களிக்கும் முறை பற்றியும் ஒலிபெருக்கி வாயிலாக தெளிவுபடுத்தப்பட்டது. (அ-2-283)

## இலங்கை மருத்துவக் கல்லூரி கவுன்சில் நடத்தும் மருந்தாளர்களுக்கான (வெளிவாரி) பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டு வருட பயிற்சியை பூர்த்தி செய்த பயிற்சி மருந்தாளர்களுக்கான வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்23ஆம்திகதி இரண்டுவருடகால பயிற்சியை பூர்த்தி செய்து கொண்ட பயிற்சியாளர்கள் மட்டுமே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.


எழுத்துப்பரீட்சையில் இலங்கை மருத்துவக் கல்லூரி கவுன்சிலால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க திருப்திகரமான தகைமை ஒன்றினைப் பெற்றுக் கொள்ளாத பரீட்சார்த்திகள் செயல்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.


பரீட்சைக் கட்டணமாக ரூபா 5 ஆயிரத்தை எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் இல. 167-1001-1317-0313, நகர மண்டபக் கிளை, கணக்கில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து எதிர்வரும் 23 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் பற்றுச்சீட்டின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கட்டணத் தொகையை எச்சந்தர்ப்பத்திலும் மீளப்பெற்றுக் கொள்ள முடியாது.


தபால் மூல விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தபாலில் சேர்க்க வேண்டும்.


சுய முகவரியிடப்பட்டதும் 9"X4" அளவு கொண்டதுமான மூன்று கடித உறைகளுடன் ஒவ்வொன்றும் 40 ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் ஒட்டப்பட்டு REGISTAR CEYLON MEDICAL COLLEGE COUNCIL, FACULTY of Medicine, Kynsey Road Colombo-08 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










இலக்கியத்துக்கான கலாபூஷணம் விருது கடந்த் டிசெம்பர் 14 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேவிபரமலிங்கத்துக்கு கலாசார அமைச்சர் ஏக்கநாயக்கவின் துணைவியார் வழங்குவதைப் பட்த்தில் காணலாம்.

வலிகா
மம் மேற்கு
பிரதேச சபையின்
உள்ளூராட்சி வார
இறுதி நாள் நிகழ்வு
அண்மையில் வலி மேற்கு
பிரதேச சபை கலாசார
மண்டபத்தில் வலி மேற்கு
பிரதேச சபைத் தவிசாளர்
திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்
தலைமையில் நடைபெற்ற
போது விருந்தினர்கள்
அழைத்துவரப்படுவதையும்
கலைஞர் ஒருவர்
கௌரவிக்கப்படுவதையும்
நிகழ்வில் மங்கல
விளக்கேற்றப்படுவதையும்
படங்களில் காணலாம்.



வலி வடக்கு பிரதேச சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து குட்டியப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்திற்கு ஒலி பெருக்கி மற்றும் கணனி சாதனங்கள் என்பன வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனால் வழங்கப்பட்ட போது...







வடமராட்சி குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் மற்றும் விருந்தினர்கள், அதிபர் வி.பரமேஸ்வரன் தலைமையில் அழைத்து வரப்படுவதையும் வடமராட்சி கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். திரவியராஜா உரையாற்றுவதையும் திருமதி எஸ். இராஜேந்திரன் பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.







சாவகச்சேரி மீசாலையின் புகழ் பூத்த அதிபரும் கலைஞருமான அ.பொ.செல்லையாவின் ஞாபகார்த் தமாக அவரது குடும்பத்தினரால் மீசாலை புத்தூர் சந்தியில் அமைக்க ப்பட்ட பயணிகள் நிழற்குடை கடந்த ஞாயிறு அவரது குடும்ப உறுப்பி னர்களால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் கொ.ஜக்சீல், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் அம்பலவா ணர், சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.



அல்வாய் மேற்கைச் சேர்ந்த மாணவி ஒருவரின் உயர் கல்விக்கென நெல்லியடி வணிகர் கழக உபதலைவரால் ஒரு தொகைப் பணம் வழங் கப்பட்ட போது....

(படம்:- கரணவாய் செய்தியாளர்)




உதவும் இதயங்கள் அமைப்பினருடாக போரினால் பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குடும்பம் ஒன்றிற்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது....

(படம்:- மானிப்பாய் செய்தியாளர்)



தொழிலதிபர் தெய்வேந்திரம் நவிண்டில் நியூட்டன் சனசமூக நிலையத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கிய போது...

(படம்:- கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆளும்தரப்பின் சூழ்ச்சிகளுக்கு பொது மக்கள் ஏமாறக் கூடாது

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறும் நிலையில், பொது மக்களைக் குழப்பி, அவர்களது மனப்போக்கை மாற்றும் விதத்தில் தந்திரங்களும், சூழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு போட்டியாக, அவரை ஒத்த உருவத்தில் மக்களைக் குழப்பும் விதத்தில் களமிறக்கப்பட்டிருக்கும் சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர் ஆர்.ஏ.சிறிசேன, (கொடி சின்னத்தில் போட்டியிடுபவர்) திடீரென ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இருந்து பின் வாங்குவதாக அறிவிக்கும் வாய்ப்புள்ளதாகவும், இதனால் பொது வேட்பாளர் மைத்திரியின் ஆதரவாளர்கள் குழப்பம் அடையத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது மக்களின் மனதைக் கெடுக்கும் ஒரு தந்திரம் எனவும், தோலவி பயத்தில் இருக்கும் ஆளும் தரப்பு



இதுபோன்ற கபடத்தனங்களின் ஊடாக பொது வேட்பாளரின் வெற்றியை மழுங்கடிக்க முயல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டுமன்றி, ஐ.தே.க. முக்கியஸ்தர்களான சஜித் பிரேமதாச, ஹரீன் பெர்னாண்டோ திடீரென்று ஜனாதிப்தியைச் சந்தித்ததாகவும், கட்சி மாறியதாகவும் கூட இனிவரும் நாட்களில் பொய்யாக செய்திகள் பின்னப்படும் சந்தர்ப்பங்கள் தென்படுவதாகத் தெரிவித்திருக்கும் ராஜித சேனாரத்ன, இதுபோன்ற சூழ்ச்சிகளுக்கு பொது மக்கள் ஏமாறக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 10மணிக்கு முன்னர் வாக்களித்திடுங்கள்

## மனோ கணேசன் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலன்று காலை 7 மணிக்கும் முற்பகல் பத்து மணிக்கும் இடையில், உங்கள் அடையாள அட்டை அல்லது ஏற்று க் கொள்ளப்பட்டுள்ள அடையாள ஆவணத்தை எடுத்துச் சென்று வாக்களியுங்கள்.

வாக்களிப்பு ஆரம்பமாகிய முதல் மூன்று மணித்தியாலங்களுக்குள் வாக்களிப்பதன் மூலம் உங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவதில் நீங்கள் எதிர்நோக்கக் கூடிய தேவையற்ற சிரமங்களை தவிர்த்துக்கொள்ளலாம் என ஜனநாயக மககள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறும் வாக்களிப்பு தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

வாக்குரிமை உங்கள் ஜன நாயக ஆயுதம். வாக்களிப்பது உங்கள் உரிமை. இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்துங்கள். வாக்களிப்பு தொடங்கிய முதல் மூன்று மணித்தியாலங்களுக்குள் வாக்களிப்பதுடன் கீழ்க்கண்ட மூன்று முக்கிய விடயங்களை மனதில் கொள்ளுங்கள்.

முதலாவது, தபால் மூலம் உங்களுக்கு வாக்காளர் அட்டை கிடைத்து இருந்தால் அதையும் வாக்களிப்பு நிலையத்துக்கு எடுத்துச் செல்லுங்கள். வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள், உங்கள் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தினால் கட்டாயமாக வாக்களிக்க முடியும். வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை கட்டாயம் அல்ல. உங்கள் அடையாளமே கட்டாயம் ஆகும்.

இரண்டாவது, இந்த தேர்தலில் மொத்தம் பத்தொன்பது வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் ஒருவருக்கு மாத்திரம் நீங்கள் வாக்களிப்பதாயின், அவரது பெயருக்கு அருகேயுள்ள அவரது சின்னத்துக்கு அருகில் புள்ளடி இடுவதன் மூலம் உங்கள் கடமையை நிறைவேற்றலாம்.

மூன்றாவது, இந்த தேர்தலில் விருப்பு வாக்குகளை அளிப்பது கட்டாயம் அல்ல. ஆனாலும் நீங்கள் விருப்பு வாக்குகளை அளிக்க விரும்பினால், அதிகபட்சமாக மூன்று வேட்பாளர்களுக்கு உங்கள் விருப்பு வாக்குகளை அளிக்கலாம்.

இந்த விருப்பு வாக்குகளை, உங்கள் விருப்பு வரிசை தெரிவுக்கு ஏற்ப மூன்று வேட்பாளர்களின் சின்னங்களுக்கு அருகில் 1, 2, 3, என்ற இலக்கங்களை இடுவதன் மூலம் உங்கள் கடமையை நிறைவேற்றலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மைத்திரியின் சகோதரனுக்கு பிணை

(கொழும்பு)

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான ஷமிந்த சிறிசேன பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திம்புலாகல பிரதேச சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினரான தம்மிக்க நிஷாந்த குமாரவேவின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர், பொலிஸில் நேற்று முன்தினம் ஆஜராகினார். இதனையடுத்து பொலிஸார் அவரை பொலனறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் நுவன் தாரக்க கீநட்டிகல பிணையில் விடுவித்தார். (இ-5)

# அரச சார்பற்ற நிறுவனங்களால் நாட்டின் நற்பெயருக்கு களங்கம்

## சிங்கள பத்திரிகை குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கைக்கு அவதூறு ஏற்படும் வகையில் வெளிநாடுகளுக்கு இந்த ஆறு நிறுவனங்களும் பொய்யான தகவல்களை வழங்கியுள்ளன.

சர்வதேச அனர்த்தகுழு, மனித உரிமை கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த ஆறு அரச சார்பற்ற நிறுவனங்களும் போலியான தகவல்களை வழங்கியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பாரியளவில் கலவரங்கள் ஏற்படும் எனவும் படையினர் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இலங்கை பற்றி பிழையான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# கைவிடப்பட்ட நிலையில் 6 கைக்குண்டுகள் மீட்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பிரதான வீதியின் அருகாமையிலுள்ள புனித திரேசம்மாள் ஆலய குறுக்கு வீதியின் அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் 6 கைக்குண்டுகளை கடந்த திங்கட்கிழமை தாம் மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கைக்குண்டுகள் அனைத்தும் உரப்பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் வீதியோரத்தில் காணப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

பொது மக்கள் சிலர் மர்மப் பொருள் அடங்கிய உரப்பையொன்று வீதியோரத்தில் காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியமையை அடுத்து பொலிஸார் குறித்த இடத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

பின்னர், அவற்றினை கைக்குண்டுகள் என அடையாளங்கண்டு அகற்றுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற அனுமதியினை நாடியிருந்தனர்.

அதன் பொருட்டு அதனை குறித்த இடத்திலிருந்து அகற்றும் வண்ணம் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதி மன்ற நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி குண்டு செயலிழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினரான கல்லடி இராணுவத்தினருக்கு கட்டளை பிறப்பித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த இராணுவப் பிரிவினர் குண்டினை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பிரதேசத்தில் மக்களிடையே சிறிது அச்சத்தினை தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆழ ஊடுருவும் ஜேர்மனிய படை இலங்கைக்குள் ஊடுருவவில்லை

## அரசு அறிவிப்பு

ஆழ ஊடுருவித் தாக்கும் ஜேர்மனிய படையினர் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆழ ஊடுருவித் தாக்கும் படைப் பிரிவைச் சேர்ந்த எட்டு ஜேர்மனிய படையினர் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த தகவல்கள் பொய்யானது என பாதுகாப்புத் தரப்பு அறிவித்துள்ளது. எந்தவொரு ஜேர்மனிய படைவீரரும் இலங்கைக்கு வரவில்லை.

ஜேர்மன் தூதரகமும் இதனை உறுதி செய்துள்ளது என தெரிவித்துள்ளது.

[illegible]

**முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரே** மேற்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சி கள் கூட இவ்வாறு போலிப் பிரசாரம் மேற்கொள்ளவில்லை.

மக்களை பிழையாக வழி நடத்தும் ஓர் முயற்சியாகவே இதனைக் கருத வேண்டும் என பாதுகாப்பு தரப்பு அறிவித்துள்ளது.

முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர், ஜேர்மனியின் ஆழ ஊடுருவித் தாக்கும் பிரிவின் உறுப்பினர்கள் இலங்கைக்குள் பிரவேசித்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார் (இ-5)

# வாக்குப் பெட்டியுடன் வாகனம் ஒன்று விபத்து


நுவரெலியாவிலிருந்து கினிகத்தேனை நோக்கி வாக்குப் பெட்டியை கொண்டு சென்ற ஜீப் ரக வாகனம் ஒனறு வட்டவளை பகுதியில் வைதது விறகு ஏற்றிச் சென்ற லொறி ஒன்றுடன்மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்து நேற்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் ஏற்பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த விபத்துச் சம்பவத்தில் ஜீப் ரக வாகனத்தில் பயணித்த 3 கடமை உத்தியோகத்தர்களுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக 3 உத்தியோகத்தர்களையும் வாகனம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி டீ.பீ.ஜீ.குமாரசிறி தெரிவிக்கின்றார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1033

## ஆலைத் தொழிலாளியும் பூனை உலகமும்

ஒருவர் மாவு ஆலை வைத் திருந்தார். அவருக்கு மனைவி, குழந்தைகள் என யாரும் கிடை



யாது.

மூன்று பேர் அவரிடம் வேலை பார்த்து வந்தார்கள்.

இப்படியே பல வருடங்கள் கழிந்தன.

ஒருநாள் அவர்கள் எல்லோ ரையும் அழைத்த முதலாளி, எனக்கு வயதாகிவிட்டது.

நான் ஓய்வு பெற விரும்புகி றேன்.

இந்த ஆலையை உங்களில் ஒருவருக்குக் கொடுக்க நினைக்கி றேன். யார் இருப்பதிலேயே சிறந்த குதிரையைக் கொண்டு வருகிறார் களோ, அவருக்கு ஆலையைக் கொடுப்பேன் என்றார்.

மூன்று பேரில் ஒருவன் ஹன்ஸ். மற்ற இருவருக்கும் உதவியாக இருப்பவன். அவன் ஆலையை உரிமையாக்கிக் கொள்ளும் அளவுக்குத் தகுதி இல்லாதவன் என்று மற்ற இருவரும் நினைத் தார்கள்.

ஹன்ஸ் கூட ஆலையைப் பெற விரும்பவில்லை.

ஆனாலும் இருவருடனும் சேர் ந்து சென்றான். அவர்கள் ஒரு கிரா மத்தை அடைந்தனர்.

நீ சாகும்வரை முயற்சித்தா லும் உன்னால் ஒரு சிறந்த குதி ரையைக் கொண்டு வர முடியாது என்று மற்ற இருவரும் ஹன்ஸைக் கிண்டல் செய்தார்கள்.

இரவு, ஒரு குகையைக் கண்ட டைந்து அங்கே படுத்துக் கொண் டார்கள்.

ஹன்ஸை எப்படியாவது விட்டு விட்டுப் போய்விட நினைத்த இரு வரும் அவன் தூங்கியவுடன் தங் கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

விடிந்ததும் தன் தோழர்கள் இல் லாததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான் ஹன்ஸ். யோசித்த படியே காட்டுக்குள் நடக்க ஆரம்பி த்தான்.

அப்போது ஒரு குட்டிப் பூனை குறுக் கிட்டது.

அதன் உடல் முழுவதும் சின் னச் சின்னப் புள்ளிகள். அந்தப் பூனை ஹன்ஸிடம் நட்பு உணர்வு டன் பேசியது.

எங்கே போகிறாய் ஹன்ஸ்?

எதற்காகக் கேட்கிறாய்? உன்



னால் எனக்கு உதவ முடி யுமா என் றான் ஹன்ஸ்.

நீ எதைத் தேடிச் செல் கிறாய் என்பது எனக்குத் தெரியும். என்னுடன் வந்து, ஏழு வருடாங் களுக்கு விசு வாசமான வேலைக்கார னாக இருந்தால் சிறந்த குதிரையைக் கொடுப்பேன் என்றது பூனை.

அந்தப் பூனை உண் மையைத் தான் சொல்கி றதா என்று பார்க்க நினை த்த ஹன்ஸ் சம்மதித்தான்.

பூனை அவனைத் தன்னு டைய கோட்டைக்கு அழைத்துச் சென்றது.

அங்கே எல்லாமே பூனைகள் தான். மாலையில் அவர்கள் சாப் பிட உட்கார்ந்தபோது, ஒவ்வொரு பூனையும் ஒவ்வொரு வாத்திய த்தை வாசித்தன.

பிறகு அந்தப் பூனை ஹன் ஸிடம், வா, வந்து என்னுடன் ஆடு என்றது.

முடியாது. நான் இதுவரை பூனைகளோடு ஆடியதில்லை என்றான் ஹன்ஸ்.

சரி, இவனைப் படுக்கைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று ஆணையிட்டது பூனை. ஒரு பூனை விளக்கை ஏற்றிப் படுக்கைக்கு வழிகாட்டியது.

மற்றொரு பூனை, அவன் படுத்ததும் விளக்கை அணை த்தது.

தொடரும்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2015 08

- 1297 - மொனாக்கோ விடுதலை பெற்றது.
- 1782 - திருகோணமலை கோட்டையை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1806 - கேப் கொலனி பிரித்தானியாவின் குடியேற்ற நாடா கியது.
- 1815 - அண்ட்ரூ ஜாக்சன் தலைமையில் ஐக்கிய அமெரி க்கப் படைகள் லூசியானாவின் நியூ ஓர்லீன்சில் பிரித்தானியரைத் தோற்கடித்த னர்.
- 1838 - அல்பிரட் வெயில் புள்ளிகளையும் கோடுகளையும் கொண்ட தொலைத்தந்தியை அறிமுகப் படுத்தி னார்.
- 1867 - வோஷிங்டன், டிசியில் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் முதன்முறையாக வாக்களிக்க அனு மதிக்கப்பட் டனர்.
- 1889 - ஹெர்மன் ஹொல்லெரிக் மின்னாற்றலில் இயங் கும் பட்டியலிடும் கருவிக்கான (tabulating machine) காப்புரிமம் பெற்றார்.
- 1900 - அலாஸ்கா இராணுவ ஆட்சியில் வந்தது.
- 1912 - ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் அமைக் கப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர் : கூட்டுப் படைகள் துருக் கியின் கலிப்பொலியிலிருந்து வெளியேறின.
- 1926 - அப்துல்-அசீஸ் இபன் சாவுட் ஹெஜாஸ் நாட்டின் மன்னராக முடிசூடி அதன் பெயரை சவுதி அரே பியா என மாற்றினார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா உண வுப் பங்கீட்டை அறிமுகப்படுத்தியது.
- 1959 - பிடெல் காஸ்ட்ரோவின் கியூபப் புரட்சி முடிவுக்கு வந்தது.
- 1973 - சோவியத் விண்கப்பல் லூனா 21 விண்ணு க்கு ஏவப்பட்டது.
- 1994 - ரஷ்யாவின் விண்வெளி வீரர் வலேரி பல்யாக் கொவ் மீர் விண்வெளி நிலையத்துக்கு சோயூஸ் விண்கப்பலில் பயணமானார். இவர் மொத்தம் 437 நாட்கள் விண்ணில் தங்கியிருந்தார்.
- 1995 - தமிழீழ விடுதலைப் புலிகள் - சந்திரிகா அரசு போர் நிறுத்தம் ஆரம்பமாகியது.


### பிறப்புகள்

- 1867 - எமிலி பால்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் (இ. 1961)
- 1891 - வால்தர் போத், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ. 1957)
- 1899 - எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங் கையின் நான்காவது பிரதமர் (இ. 1959)
- 1899 - ஏ. பெரியதம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1978)
- 1935 - எல்விஸ் பிரெஸ்லி, அமெரிக்க இசைக் கலைஞர் (இ. 1977)
- 1942 - ஸ்டீபன் ஹோக்கிங், கோட்பாட்டு இயற்பியலாளர்
- 1942 - ஜூனிசிரோ கொய்சுமி, ஜப்பான் பிரதமர்

### இறப்புகள்

- 1324 - மார்கோ போலோ, இத்தாலிய வணிகர் (பி. 1254)
- 1642 - கலிலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர் (பி. 1564)
- **1941 - பேடன் பவல், சாரணர் இயக்கத்தைத் தோற்று வித்த ஆங்கிலேயர் (பி. 1857)**
- 1997 - மெல்வின் கால்வின், நோபல் பரிசு பெற்ற அமெரி க்கர் (பி. 1911)
- 2002 - அலெக்சாண்டர் புரோகோரொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்யர் (பி. 1916)
- 2008 - லசந்த விக்கிரமதுங்க, இலங்கை ஊடகவியலாளர்

### பேடன் பவல்



சாரணீய சகோதரத்தின மூலம் உலககெங்கும் சமாதான த்தை நிலை நாட்டப் பாடுபட்ட சாரணீய இயக்கத்தின் தந்தை கில்வெல் பேடன் பவல் பிரபு இங்கிலாந்தில் இலண்டன் நக ரிலே 1857 ஆம் ஆண்டு பெப்ர வரி மாதம் 22 ஆம் திகதி பிறந் தார்.

ஏழு சகோதரர்களை உள்ளட க்கிய குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகப் பிறந்திருந்த பவலு க்கு மூன்று வயதாக இருக்கும் போதே தந்தையார் இறந்து விட்டார். இங்கிலாந்தில் பிறந்த ஆங்கிலத் தளபதியான இவர் 1906 ஆம் ஆண்டு ஸ்கவுட் எனப்படும் சாரணர் இயக்கத்தை தோற்றுவித்தார். 1910 இல் சிறுமிகள் சாரணர் இயக்கத்தையும் தொடங்கினார். இவருக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் இராபாட் ஸ்மித் பேடன் பவல் என்பதாகும். இவர் 1941 இல் கென்யாவில் காலமானார்.

### சாரணர் இயக்கம்

சாரணர் இயக்கம் உலகளாவிய அளவில் செயற்படும் ஓர் இளைஞர் இயக்கமாகும். இது 1907 ஆம் ஆண்டு பேடன் பவல் பிரபுவால் தொடங்கப்பட்டது. 2007 இல் உலகின் 216 நாடுகளில் ஆண்களும் பெண்களுமாக 38 மில்லியனுக்கும் அதிகமான சாரணர்கள் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

மொத்தத்தில் அவர்கள் பெரிய வெற்றிப்படமாக அமைந்ததோடு ரஜினியின் நடிப்புக்கு ஒரு மைல்கல்லாக அமைந்தது. எனக்கு நட்சத்திர அந்தஸ்தை பெற்றுத் தந்த படம் அவர்கள் என்று ரஜினி குறிப்பிட்டுள்ளார்.

1977 ஆம் ஆண்டில் மொத்தம் 15 படங்களில் ரஜினிகாந்த் நடித்தார். அவற்றில் புவனா ஒரு கேள்விக் குறி பெரும் திருப்பம் ஏற்படுத்திய படமாகும்.

### கவிக்குயில்

எஸ்.பி தமிழரசி தயாரித்த இந்தப்படத்தில் சிவகுமார் ஸ்ரீதேவி பிரதான வேடத்தில் நடித்தனர். ரஜினிகாந்துக்கு ஜோடியாக லட்சுமிஸ்ரீ நடித்தார். மற்றும் எஸ்.வி.சுப்பையா படாபட் ஜெயலட்சுமி ஆகியோரும் நடித்தனர்.

ஆர் செல்வராஜ் எழுதிய கதைக்கு திரக்கதை- வசனம் எழுதியவர் பஞ்சு அருணாசலம். தேவராஜ்- மோகன் டைரக்ட் செய்தனர்.

இளையராஜா இசை அமைப்பில் பாலமுரளி கிருஷ்ணா பாடிய சின்னக் கண்ணன் அழைக்கிறான் என்ற பாடல் பெரிய ஹிட்டாக்கியது.

### ரகுபதி ராகவன் ராஜாராம்

இந்தப் படத்தில் ரஜினியுடன் விஜயகுமார் சுமித்ரா ராம்குமார் ஷோபனா ஆகியோர் நடித்தனர். ராம்-ரஹிம் கதை-வசனம் எழுதிய இப்படத்தை இயக்கியவர் துரை.

முதலில் இப்படத்துக்கு ரகுபதி ராகவ ராஜாராம் என்று பெயர் வைத்திருந்தனர். தணிக்கை குழுவின் ஆலோசனைப்படி ரகுபதி ராகவன் ராஜாராம் என்று மாற்றப்பட்டது.

### புவனா ஒரு கேள்விக்குறி

ரஜினிகாந்துக்குத் திருப்புமுனையாக அமைந்த படம் புவனா ஒரு கேள்விக்குறி.

மகரிஷி எழுதிய கதைக்கு திரைக் கதை -வசனம் எழுதியவர் பஞ்சு அருணாச்சலம் எஸ்.பி.முத்துராமன் டைரக்ஷனில் ரஜினி நடித்த முதல் படம்.



19

புவனா ஒரு கேள்விக்குறியில் ரஜினிகாந்த் சுமித்ரா

## திருப்புமுனை ஏற்படுத்திய "புவனா ஒரு கேள்விக்குறி"

இந்தப் படத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், அதுவரை நல்லவராகவே நடித்து வந்த சிவகுமார் கெட்டவராகவும் கெட்டவராக நடித்து வந்த ரஜினிகாந்த் நல்லவராகவும் நடித்தனர்.

இந்த மாற்றம் நன்றாக கிளிக் ஆகியது. மாறுபட்ட வேடங்களையும் தன்னால் நன்றாக நடிக்க முடியும் என்பதை ரஜினிகாந்த் நிரூபித்தார். சிவகுமாரால் கைவிடப்பட்ட சுமித்ராவுக்கு அடைக்கலம்' கொடுத்து ஆதரிக்கும் நல்லவராக அவர் நடித்ததை ரசிகர்கள் வரவேற்றனர்.

ரஜினி பாடுவதுபோல் அமைந்த ராஜா என்பார் மந்திரி என்பார் ராஜ்ஜியம் இல்லை ஆள! ஒரு ராணியும் இல்லை வாழ என்ற பாடல் பெரிய ஹிட் ஆகியது.

02-09-1977 அன்று வெளியான இப்படம் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது. இந்தப் படத்துக்கு தமிழக அரசு ரு 1 லட்சம் மான்யம் வழங்கியது.


### எஜ்.பி.முத்துராமன் பேட்டி

ரஜினிகாந்தை நல்லவராக நடிக்க செய்ய வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது என்று இயக்குனர் எஜ்.பி.முத்துராமனிடம் கேட்டபோது அவர் கூறியாதாவது;

என் டைரக்ஷனில் ரஜினிகாந்த் நடித்த முதல் படம் புவனா ஒரு கேள்விக்குறி. வில்லன் வேடத்திலும் ஸ்டைல் நடிப்பிலும் அவர் ஏற்கனவே முத்திரை பதித்திருந்தார். அவரை புதுமையான வேடத்தில் நடிக்க வைக்க வேண்டும் என்று நானும் பஞ்சு அருணாச்சலமும் முடிவு செய்தோம். இந்தப் படத்தில் இரண்டு கதாநாயகர்கள். *(தொடரும்)*

---

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- பு

.....சூத்தியும் முத்தியும் பாத்து மகளக் காணமேன்னு நெஞ்சில் அடிச்சு நிமிந்து பாத்தா கையில கொத்தோட கால்ல செம்மண்ணோட கெறங்கிக் கிறுகிறுத்து வெளியிலருந்து வீட்டுக்குள்ள வர்றா கருவாச்சி.

கவலைப்படாத ஆத்தா..... கள வெட்டியாச்சு

பாதகத்தி மகளே என்னாடி சொல்ற?

சுப்புலாபுரம் ஆளுகளுக்குச் சொல்லி விட்டு கால்ரூவா எச்சாக் குடுத்து நெலா வெளிச்சத்துல விடிய விடிய களையெடுத்து முடிச்சிட்டுத்தான் வீட்டுக்கு வாரேன்.

துட்டு..?

பசு மாட்டுச் சாணியும் குமிச்சு குமிச்சு எருவாக்கி வச்சிருந்தேன்ல.. அத ஆமையன் கெழவனுக்கு நாலு ரூவாய்க்கு வித்தேன்.

யாத்தே! நீ பொழைச்சாலும் பொழைச்சுருவ போலருக்கே.. மகமேல விழுந்து கட்டிப்புடிச்சு ஆச தீர அழுது பித்தேறிப் போனா பெரியமூக்கி.

அடுப்புச் சாம்பல அள்ளித் தெள்ளிப் பல்லுவெளக்கப் போனா கருவாச்சி.

ஒரு மாசமா ஒரே யோசன பெரிய மூக்கிக்கு. எப்பிடிப் பொழைக்கப் போறா எம் மக இந்த ஊர்ல?

ஒழவுகாட்ல ஏர மறிக்கிறான். களையெடுக்க விடுறானில்ல; நெஞ்சுல வம்மம் வச்சு அலையிறான் இன்னம் என்னென்ன செய்யக் காத்திருக்கானோ? எத்தன நாளைக்குத்தான் ஓடி வரும் மொதலக். கம்பட்டிச் சொந்தங்க. எத்தன மொறைதான் நியாயங் கேட்டுக் குடுப்பாக உள்ளூர் ஆளுக? எங் கண்ணுள்ள காலம் வரைக்கும் எம் மகமேல துரும்பு விழுக விடமாட்டேன். நான் மண்டையக் கிண்டையப் போட்டுட்டா எப்பிடித் தப்பிக்கும் புலிக அலையிற ஊர்ல பொட்டையாட்டங்குட்டி?



இப்படிப் பல மாதிரி யோசிச்சு ஊர்ப் பெருசுகளக் கலந்து ஒரு முடிவுக்கு வந்து சாவடிப்பட்டிக்கு ஆள் சொல்லி விட்டுட்டா பெரியமூக்கி.

பின்னந்தி வெயிலு. மூணு ஆம்பளைக. ரெண்டு பொம்பளைக . ஆன மொத்தம் அஞ்சு ஆளுகவாராக சொக்கத் தேவன்பட்டி எல்லையில. நல்ல காரியத்துக்கு ஒத்தப்படை எண்ணிக்கையில போகணும்ங்கறது ஊர் ஆசாரம்.

வெள்ளையும் சொள்ளையுமா கழுத்துல சுத்துன அங்கவஸ்திரம் காத்துல பறக்க விலங்கு மாதிரி வெரல்கள்ல மோதிரம் போட்டு கறுப்பு, வெள்ளை மீசையை முறுக்கி மேலேத்தி விட்டு முன்ன நடந்து வாராரு பாருங்க.

அவருதான் சாவடிப் பட்டி விட்டி. மீச நரச்சாலும் எளந்தாரி ஒடம்பு. அந்த வட்டாரத்துலயே ஏறு கையான ஆளு. நெலம் பொலம் தோப்பு தொரவு சொந்தக்கெடைன்னு தாறு மாறான சொத்து.

ரெண்டு வருசமாச்சு பொண்டாட்டி செத்து. ஓரே மகளக் குள்ளப் புரத்துல கட்டிக்குடுத்திட்டாரு ஒரு பள்ளிகூட வாத்தியாருக்கு.

பய ஒரே பய. பெறவியிலயே புத்தி மாறாட்டமானவன். சங்கிலி கட்டிச் சாப்பாடு போடுறாக வீட்ல. பூவும் பழம் தேங்கா வச்ச மஞ்சப் பையைக் கையில குடிச்சு வாரவரு அவரு தங்கச்சி புருசன்.

அய்யா மேல விழுந்து போக மிச்ச நெழல் நெலத்துல விழுந்தாலும் விழுகலாமே தவிர தன் மேல விழுந்திரக் கூடாதுன்னு தள்ளிக் கொட புடிச்சு வாரான் பாருங்க... அவன் வேலக்காரன். கெழவி.. விட்டிக்கு நல்லத்தா மொனைகாப்புழ நெறத்துல பட்டுச் சேல கட்டி வாரவ விட்டி தங்கச்சி. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ பிரசன்னத்தால் வடக்கு மக்கள் அச்சத்தில்

(கொழும்பு)

**ஜனாதிபதி தேர்தல் வன்முறை சம்பவங்கள் மேலும் அதிகரிக்குமாயின் நீதியான தேர்தலுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும். அத்தோடு வடக்கில் இராணுவ பிரசன்னம் அதிகரித்த வண்ணம் உள்ளன. அங்கே மக்கள் அச்சத்துடனே காணப்படுகின்றனர். ஆகையால் வட பகுதியில் வாக்கு பதிவு குறைவடையலாம் என்ற அச்சம் உள்ளது என தேர்தல் வன்முறைகளை கணகாணிப்பதற்கான மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.**

இதேவேளை தேர்தலில் பொலிஸார் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருகின்றனர். மேலும் இதுவரை காலமின்றி தபால் மூல வாக்களிப்பு கால எல்லையற்ற முறையில் நடைபெற்று வருகிறது. இது திட்டமிட்ட செயற்பாடாகும். அத்தோடு இதுவரை 420 வன்முறை சம்பவம் பதிவாகியிருப்பதாகவும் குறித்த கண்காணிப்பு குழு சுட்டிக்காட்டியது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே தேர்தல் கண்காணிப்பு குழுவின் ஏற்பாட்டாளர் பாக்கிய சோதி சரவணமுத்து இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு வெளியான பின்பிலிருந்து நாம் தொடர்ந்தும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டோம். எனவே சென்ற வருடத்தை பார்க்கிலும் இத்தேர்தலில் வன்முறை சம்பவம் குறைவாக காணப்படினும் துப்பாக்கி பிரயோகம் கடந்த ஜனாதிபதி தேர்தலில் குறைவாகவே காணப்பட்டது. இந்த தேர்தலில் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தேர்தல் பிரசார பணிகள் முடிவுற்ற போதிலும் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எனவே இதுவரை 420 வன்முறை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 237 பாரதூரமான சம்பவங்கள் உள்ளடங்குகின்றன. அத்தோடு 183 சம்பவங்கள் பாரதூரமற்றசம்பவங்களாக பதிவாகியுள்ளன.

இதற்கமைய யாழ். மாவட்டத்தில் அதிகமான வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளன. மேற்படி யாழில் 222உம் பதுளையில் 192 உம் குருநாகலில் 182 உம் கண்டியில் 17 வன்முறை சம்பவமும் பதிவாகியுள்ளன.

இதேவேளை 26 துப்பாக்கி பிரயோகம் இதுவரை பதிவாகியுள்ளன. மேலும் 3 கைக்குண்டு வெடிப்பு சம்பவம் பதிவாகியுள்ளன. இதன்படி கொலன்னாவை, கஹவத்தை ஆகிய பிரதேசங்களிலும் எதிரணி பொது வேட்பாளர் மேடையின் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டது.

அரச உடைமையை ஆளும் தரப்பு பலாத்கார முறையில் பிரயோகம் செய்து வருகிறது. பிரதேச சபை உறுப்பினர்கள் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புள்ள எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இத்தகைய சம்பவங்கள் தொடர்பில் அறிந்தும் பொலிஸ் பக்கச்சார்பான முறையில் நடந்து வருகிறது. மேற்படி வன்முறை சம்பவங்களுடன் கைது செய்யப்பட்டவர்கள்பிணையில் விடுதலை செய்யப்படுகின்றனர்.

அந்த சம்பபவங்களை கண்டு கொள்ளாமல் செயற்பட்டு வரு கிறது. இதேவேளை வடக்கில் இராணுவ வீரர்களின் பிரசன்னம் அதிகமாக உள்ளன. சிலர் தேர்தல் பிரசாரங்களிலும் ஈடுபடுகின்றனர். மேலும் பாதுகாப்பு படையினர் இரகசியமான முறையில் வடக்கில் உலா வருகின்றனர் இவையனைத்தும் வடக்கு மக்கள் நன்கு அறிவர்.

இதற்கமைய வடக்கில் வாக்கு பதிவு குறையலாம். மக்கள் அச்சத்துடன் உள்ளனர். வடக்கு மாகாண தேர்தலை போன்று வடக்கு வாக்களிப்பாக இருக்க முடியாது. இது தேசிய தேர்தலாகும். எனவே கண்காணிப்பு குறைவாகவே உள்ளன.

இதுவரை காலம் இல்லாத வகையில் தபால்மூல வாக்களிப்பு நேற்றும் இடம்பெற்றுள்ளது. எனவே இவை மீது எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இது திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகவே கருத வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித் தாா. (இ-5)

# 420 தற்காலிக வீதித் தடைகள்

இன்று நடக்கும் ஜனாதிபதித் தேர்தலின் பாதுகாப்புக்காக நாடெங்கும் நேற்று இரவு முதல் மொத்தமாக 420 தற்காலிக பொலிஸ் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வாக்களிப்பு ஆரம்பித்தது தொடக்கம் வாக்குகள் எண்ணி முடிவுகள் அறிவிக்கப்படும் வரை இந்த 420 வீதித் தடைகளும் இருக்கும் எனவும் இவற்றுக்கு மேலதிகமாக அவ்வப்போது தேவையான இடங்களில் உடனடி வீதித் தடைகளும் முன்னறிவிப்பு எதுவுமின்றி அமைக்கப்படும் எனவும் அஜித் ரோஹண கூறினார்.


இதற்கிடையில் நேற்றுமுன்தினம் வரை தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பில் 340 முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்தன எனவும், இவை தொடர்பில் 150 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 160 | 170 | 140 |
| உருளைக்கிழங்கு | 65-75 | 90 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 400-430 | 500 | 400 | 500 |
| தக்காளி | 120 | 160 | 150 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 40-50 | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 120 | 120 | 140 |
| கரட் | 140 | 200 | 210 | 200 |
| பூசணி | 35-40 | 40 | 50 | 60 |
| புடோல் | 180 | 150 | 130 | 120 |
| வாழைக்காய் | 70 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 50-90 | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 75-80 | 100 | 100 | 100 |
| பாகறகாய் | 300-350 | 250 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 130-140 | 120 | 170 | 120 |
| கருணைக் கிழங்கு | 55-60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 180-200 | 220 | 250 | 180 |
| லீக்ஸ் | 250 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 120-140 | 200 | — | 200 |
| கறிமிளகாய் | — | 400 | 360 | 260 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | — | 350 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 120 | 130 | 160 | 120 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 50 | 40 |
| தேசிக்காய் | 40 | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 45-50 | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 120-130 | 110 | — | 140 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 245

வெங்கடெஸ் சுபா





காயா காயத்திரி





கீர்த்தனா கருணாகரன்




ரத்தினசபாபதி பாலராஜா




மின்னெரி மின்னெரிகொட்டுவ




சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள நிவாரணம் வழங்குவதில் இழுபறி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக தாம் நிவாரணங்களை பெற பலநோக்கு கூட்டுறவுச் சங்க கடைகளுக்கு வந்து திரும்பி போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வவுனியாவில் கடும் மழையால் பல கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகியிருந்தன. இந் நிலையில் நிவாரணம் வழங்க வேண்டியவர்களின் பதிவுகள் கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு நிவாரணம் பெறுவதற்கான சிட்டைகளும் வழங்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையில் நாம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்று பார்த்த போது அவர்கள் நிவாரணப் பொருட்கள் வழங்க முடியாது எனவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக நாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நிவாரணங்களை வழங்குமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பணித்திருந்தார். இதன் பிரகாரம் முதல் கட்டமாக வழங்கப்பட்ட பெயர்ப் பட்டியலுக்கு நிவாரணங்களை நாம் வழங்கியிருந்தோம்.

இதற்கு பல இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எனினும் அரசாங்க அதிபர் பணிமனையினால் அதற்கான நிதி இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை. இந் நிலையில் இரண்டாம் கட்ட பெயர்ப் பட்டியல் எமக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் மக்களும் எமது சங்கங்களுக்கு பொருட்களை கொள்வனவு செய்ய வருகின்றனர்.

எனினும் எமக்கு அவர்களுக்கு வழங்குவதற்கான பொருட்களை கொள்வனவு செய்யும் அளவிற்கு நிதி இல்லாமையினால் அரசாங்க அதிபரிடம் நிதியை கோரியுள்ளோம்.

அந்நிதி வரும்வரை இரண்டாம் கட்ட பெயர் பட்டியலில் உள்ள வர்களுக்கு பொருட்களை வழங்குவதை நிறுத்தியுள்ளோம் என தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் அரசாங்க அதிபரிடம் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதிகள் நிதியை வழங்குமாறு கோரியதாக அக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. (அ-2-250)




# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(மானிப்பாய்)

நாம் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் 'கல்வியில் வறுமையினை ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக மாணவிக்கான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முறிகண்டி பகுதிகளைச் சேர்ந்த இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கடந்த முதலாம் திகதி மதியம் கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுசரணையை புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் சண்முகநாதன் குருபரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால, கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் ச.சிவகரன், ச.செந்தில்குமரன், நாம் நண்பர்கள் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

குறித்த மாணவர்கள் கல்வி அடைவுமட்டத்தில் காட்டும் முன்னேற்றத்திற்கேற்ப தொடர்ந்தும் கல்விக்கான உதவிகள் வழங்கப்படுமென நாம் நண்பர்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (அ-2-23)

# வவுனியாவில் இம்முறை 109705 பேர் வாக்களிப்பர்

வவுனியா மாவட்டத்தில் இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 பேர் வாக்களிக்கவுள்ள தாக வவுனியா மாவட்ட தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டின் தேர்தல் இடாப்பின் பிரகாரம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் உள்ளடங்கியதாக ஒரு இலட்சத்து 9ஆயிரத்து 705 பேர் வாக்களிக்கவுள்ளதாகவும் அவர்களுக்காக 134 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 15 வாக்களிப்பு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை 15 வாக்கு எண்ணும் நிலையங்களில் 9 நிலையங்களில் சாதாரண வாக்குகளும் 6 நிலையங்களில் தபால்மூல வாக்குகளும் எண்ணப்படவுள்ளதாகவும் இம் முறை தேர்தலில் 8 ஆயிரத்து 364 பேர் தபால் மூலமாக வாக்களிக்க தகுதி பெற்றிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் 2013 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 252 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இம்முறை 5ஆயிரத்து 453 வாக்காளர்கள் அதிகரித்துள்ளனர்.

வாக்களிப்பு நிலையங்களுக்காக வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 35 பாடசாலைகளிலும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 50 இற்கு மேற்பட்ட பாடசாலைகளிலும் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (அ-2-250)

# திறந்த நிலையில் வடிகால்கள் விழுந்து எழும்பும் பயணிகள்

(முல்லைத்தீவு)

மாங்குளம்-முல்லைத்தீவு பிரதான வீதியின் காப்பெற் இடும் பணி முடிவுற்ற நிலையிலும் வீதியின் இருமருங்கிலும் நீரோட்டத்திற்கென அமைக்கப்பட்டுள்ள வடிகால்களுக்கான மேல் மூடிகள் போடப்படாமையால் இரவுவேளைகளில் பயணிப்போர் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

முள்ளியவளை காட்டா விநாயகர் சந்தியில் உள்ள சில பகுதிகளுக்கே இதுவரை மேல் மூடிகள் இடைப்படவில்லையெனவும் இதனால் பாரிய விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாதசாரிகள் முதல் கால்நடை வரை குறித்த வடிகாலுக்குள் இடறிவிழும் சந்தர்ப்பங்கள் அடிக்கடி நிகழ்வதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன் இவ் வீதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவுவேளைகளில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அமைக்கப்பட்டுள்ள வடிகால்களானது மூன்றரை அடிக்கு மேற்பட்ட ஆழத்தில் காணப்படுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதியை காப்பெற் இட்டு போக்குவரத்தை இலகுபடுத்தி வடிகால்களையும் மூடுவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென பாதசாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2)

# மேய்ச்சல் தரைகள் இன்மையால் கால்நடைகள் கடும் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளிற்கான மேய்ச்சல் தரைகள் இன்மையால் கால்நடைவளர்ப்போர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட உற்பத்தி உதவிப்பணிப்பாளர் கௌரிதிலகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் 37 ஆயிரத்து 311 மாடுகளும், 6 ஆயிரத்து 705 ஆடுகளும், 996 எருமைகளும் வளர்க்கப்படுவதாகவும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் காலபோக நெற்செய்கை காரணமாக இக்கால்நடைகளிற்கான உணவினை பெறுவதில் கால்நடை வளர்ப்போர் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் [illegible] வழங்கிவைக்கப்பட்ட போதும் இவை கால்நடைகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லையெனவும் கால்நடை வளர்ப்போரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளின் உணவுத் தேவைக்கென ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரைகள் பொதுமக்களால் அடாவடித்தனமாக இருப்பிடங்கள் அமைக்க பிடிக்கப்பட்டமையே கால்நடை [illegible] உணவுப் பிரச்சினைக்கு பிரதான காரணம் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வாழ்வின் எழுச்சி திட்டத்தினால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களுக்கு உதவுமுகமாக நல்லின கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டன.

அவை மேய்வதற்கு தரைகள் போதுமானதாக இன்மையால் பெறப்படும் பால் குறைவாக இருப்பதாக பால் விநியோகிப்பவர்களால் தெரிவிக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிரியோடு இருந்திருக்கலாம்!

மு.க.அழகிரி மனது வைத்தால்தான் பதவிகள் கிடைக்கும் என்ற நிலை மாறிவிட்ட சூழலில், மதுரை மாவட்ட தி.மு.கவின் உட்கட்சித் தேர்தல் நடைபெற்றது. மத்தியிலும் மாநிலத்திலும் தி.மு.கவுக்கு பவர் போன பிறகு, அழகிரிக்கும் பவர் போய்விட்டது. அழகிரியின் தீவிர விசுவாசிகளான ஜெயராம், கோ.தளபதி, வி.கே.குருசாமி, எஸ்ஸார் கோபி, மூர்த்தி, தமிழரசி, மிசா.பாண்டியன் என அனைவரும் வரிசையாக ஸ்டாலினிடம் சரண்டராகிவிட்டனர். அழகிரியின் விசுவாசிகளாகக் காட்டிக்கொண்ட தென்மாவட்டச் செயலாளர்களும் இப்போது ஸ்டாலின் பக்கம். இந்த நிலையில்தான், போஸடர் பிரச்சினை வெடித்தது. தி.மு.கவை எதிர்த்து அழகிரி பேட்டி கொடுக்க அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்கு எதிராக வேலை செய்ய, அதனால் கடுப்பான ஸ்டாலின், மதுரை மாநகரில் கட்சி அமைப்பையே கலைத்தார்.

பொறுப்புக்குழு அமைத்து அதில் அனைத்திலும் தனது ஆதரவாளர்களை நியமித்தார். அப்போதிருந்தே அழகிரி அணி கலகலத்துப்போனது. கட்சித்தேர்தல் களத்தில் அழகிரி ஆட்கள் இல்லை என்றாலும் ஸ்டாலின் அணிக்கு உள்ளேயே பதவிகளைப் பிடிக்கக் கடும் போட்டி நடந்தது. முன்பு இரண்டாக இருந்த மதுரை மாவட்டம் தற்போது நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. மதுரை மாநகர (தெற்கு) செயலாளர் பதவிக்கு தற்போதைய பொறுப்புக்குழு தலைவர் கோ.தளபதியும், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமனும் மோதினர். இருவருக்குமே ஸ்டாலினிடம் செல்வாக்கு உண்டு. நாயக்கர் வாக்குகள், பணவசதி, அரசியல் அனுபவம் ஆகியவற்றைக் காண்பித்து கோ.தளபதி முயற்சி செய்தார். அழகிரி ஆட்களை ஒவ்வொருவராக அழைத்து வந்தது தாம்தான் என்றும், அவர்களின் மிரட்டலுக்கு அஞ்சாமல தான் செயற்படுவதாகவும், அ.தி.மு.கவுக்கு கடும போட்டி கொடுத்து ஆள்பலத்துடன் கட்சிப் பணி ஆற்றுவதாகவும் கூறி அவரை எதிர்த்து ஜெயராமன் போட்டியிட்டார். இருவரையும் கைவிட ஸ்டாலினுக்கு மனமில்லை. ஜெயராமனுக்கு மாநில செயற்குழு உறுப்பினர் பதவி தருவதாகச் சொல்லி அவரை போட்டியலிருந்து விலகச் சொல்லிவிட்டார் ஸ்டாலின்.




மதுரை மாநகர் (வடக்கு) செயலாளர் பதவிக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேலுச்சாமி ஆசைப்பட்டார். “மற்றவர்கள் எல்லோரும் அழகிரியிடம் போய் வந்தவர்கள். அப்போது முதல், நான் மட்டுமே ஸ்டாலின் ஆதரவாளராக உள்ளேன்’

மூர்த்தி



தளபதி



வேலுச்சாமி



என்று தலைமையிடம் சொல்லியிருக்கிறார். பொன்.முத்துராமலிங்கம் கட்சியில் சீனியர் என்றபோதிலும் அவர்மீது ஸ்டாலினுக்கு நம்பகத்தன்மை இல்லை. ஆனாலும் அவரும போட்டியிட்டார். கூடவே தங்களுடைய பராக்கிரமங்களைச் சொல்லி மிசாபாண்டியனும் வி.கே.குருசாமியும் முயற்சித்தனர். யாதவருக்குப் பதவி கொடுங்கள் என்று முன்னாள மேயர் குழந்தைவேலு முயற்சித்தார். ஆனாலும், வேலுச்சாமி மீதுதான் ஸ்டாலின் அதிகம் நம்பிக்கை வைத்திருக்கிறார்.

மதுரை புறநகர் (தெற்கு) மாவட்டத்தை விரும்பினார், சேடப்பட்டி முத்தையா. தராத பட்சத்தில் தன் மகன் மணிமாறனுக்குக் கேட்டார். தனிப்பட்ட முறையில் அந்தப் பகுதிகளில் அவருக்கு செல்வாக்கும் சாதி பலமும் பணபலமும் இருப்பதாகக் கூறினார். மாநகரில் தன் தந்தைக்கு பதவி தரப்படவில்லை என்றால், புறநகர் தெற்கு மாவட்டத்தை தனக்குத் தருவார்கள் என்று பொன்.முத்துவின் மகன் பொன்.சேது எதிர்பார்த்தார்.

மதுரை புறநகர் (வடக்கு) மாவட்டத்துக்கு தற்போதைய புறநகர் மாவட்டச் செயலாளர் மூர்த்தியை விட்டால் வேறு ஆளில்லை என்ற நிலைதான். இவரை எதிர்த்து திருப்பரங்குன்றம் கார்த்தி போட்டியிட்டார். ஆனால, இவருக்கு எதிராக எஸ்ஸார் கோபி தரப்பினர செயற்பட்டதால் இவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. முன்னாள் அமைச்சர் தமிழரசி, பெண்கள் அல்லது தலித் கோட்டாவில் தனக்கு ஒதுக்குவார்கள் என்று நினைத்தார். ஆனால், கடந்த வருடம் அய்யர் பங்களாவல் பிரமாண்ட நிதியளிப்புக் கூட்டத்தை நடத்திக் காட்டி “மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது’ என்று ஸ்டாலினின் பாராட்டைப் பெற்றுவிட்டார் மூர்த்தி.

மதுரை மகால் பகுதியில் தங்கள் சமுதாயத்துக்கு செயலாளர் பதவி வழங்கவில்லை என்று முஸ்லிம் அமைப்புகள் எதிர்ப்பைக் காட்டியுள்ளன. இதனால், இந்தப் பகுதியைச் சேர்ந்த ஜாகீர் என்பவருக்கு மாநகர் பொருளாளர் பதவி வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகர் வடக்கு மாவட்டம் வ.வேலுச்சாமி, மாநகர் தெற்கு மாவட்டம் கோ.தளபதி, மதுரை வடக்கு மாவட்டம் மூர்த்தி, தெற்கு மாவட்டம் மு.மணிமாறன் என்று கடந்த 24ஆம் திகதி தலைமை அறிவித்துவிட்டது. மாவட்டச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றிய நகரச் செயலாளர் பதவி கிடைக்காதவர்கள், “அழகிரியோடு இருந்திருக்கலாம்’ என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

யூனியர் விகடன்

# ஜெயாவின் எதிர்காலம் இவர் கையில்!

சொத்துக் குவிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிரான ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரின மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள தனி நீதிபதி சி.ஆர்.குமாரசாமி, நேர்மையானவர், கண்டிப்பானவர் என்ற தகவல்களால் அ.தி. மு.க வட்டாரம் கலங்கிப் போயிருக்கிறது.




ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூரு தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து ஜெயலலிதா உள்ளிட்ட நால்வரும் பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டனர். தீர்ப்பை எதிர்த்து நான்கு பேர் தரப்பிலும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனுத தாக்கல் செய்யப்பட்டது. அவர்களுக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் ஜாமீன் தர மறுத்துவிட்டது. எனவே, உச்ச நீதிமன்றம் சென்றனர். அங்கு, அவர்களுக்கு ஜாமீன் கிடைத்தது. கடந்த டிசம்பர 18 ஆம் திகதிக்குள் மேன்முறையீட்டு ஆவணங்கள் அனைத்தையும் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்பது உட்பட பல நிபந்தனைகளுடன் ஜாமீன் வழங்கப்பட்டது. அதன்படி, டிசம்பர் 17 ஆம் திகதியே அனைத்து ஆவணங்களையும் தாககல் செய்தனர். அதையடுதது, உச்ச நீதிமன்றம் நான்கு பேருக்கும் நான்கு மாதங்களுக்கு ஜாமீனை நீட்டித்ததுடன், உயர் நீதிமன்றத்தல் தனி பெஞ்ச் அமைத்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

தனி நீதிபதியாக நியமிக்கப்படப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கிய நிலையில், நீதிபதி சி.ஆர். குமாரசாமி நியமிக்கப்பட்டார். சிக்க ராசப்பா குமாரசாமி என்பது சி.ஆர்.குமாரசாமியின் முழுப் பெயர். பெங்களூரில் 25.08.1953 இல் பிறந்த குமாரசாமி, கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெங்களூர் நேஷனல் கல்லூரியில் பி.எஸ்.சி பட்டமும் பெங்களூர் ஸ்ரீரேணுகாச்சாரியா சட்டக் கல்லூரியில் எல்.எல்.பி பட்டமும் முடித்தவர். குமார சாமி யின் மனைவி பெயர் நாகரத்தினம்மா. இவர்களுக்கு மாயசந்திரா, நயனா என இரண்டு மகள்கள் உள்ளனர்.

1983 இல் பெங்களூர் பார் கவுன்சிலில் பதிவு செய்த குமாரசாமி, கர்நாடகா உயர் நீதிமன்றத்தன் தலைமை நீதிபதியாக இருந்த அனுமந்தப்பாவிடம் ஜூனியராக இருந்தார். தொழிலாளர்களின் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளையும் வழக்கறிஞராக இருந்து நடத்தியுள்ளார். 1995 ஆம் ஆண்டு மாவட்ட சிவில் நீதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். மைசூர், சிக்மகளூர், ஹாசன் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அமர்வு நீதிபதியாக பணியாற்றி உள்ளார். சி.பி.ஐ ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதியாக 8 மாதங்கள் பணியாற்றி இருக்கிறார். 2005 இல் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்டு, 2007 இல் உயர் நீதிமன்றத்தின் ரெகுலர் நீதிபதியானார். தற்போது, உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகளில் ஒருவராகவுமுள்ளார். வரும் ஆகஸ்ட் 25 ஆம் திகதி பணி ஓய்வுபெற இருக்கிறார்.

கர்நாடக உயர் நீதிமன்ற வட்டாரங்களில் விசாரித்தபோது, “2005 இல் நித்தியானந்தா ஆசிரமத்தில் கோபிகா என்ற பெண் சீடர் காணாமல்போன வழக்கில் நித்தியானந்தா கைது செய்யப்பட்டார். அந்த வழக்கை விசாரித்த கீழ் நீதிமன்றம் நித்தியானந்தாவை விடுதலை செய்தது. மேல்முறையீடு மனு உயர் நீதிமன்றத்துக்கு வந்தபோது, அதை நீதிபதி குமாரசாமி விசாரித்தார். கீழ்நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பையே உறுதி செய்து நித்தியானந்தாவை விடுதலை செய்தார். நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்



குமாரசாமி

திய 30 ஆயிரம் கோடி ரூபாய் முத்திரைத்தாள் மோசடி வழக்கில் குற்றவாளி அப்துல் கரீம்லால் தெல்கிக்கு சிறைத் தண்டனை வழங்கியவர் நீதிபதி குமாரசாமி என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர், 258 கொலை வழக்குகளை விசாரித்துள்ளார். அதில், 242 வழக்குகளில் தண்டனை வழங்கியுள்ளார். 13 ஊழல் வழக்குகளை விசாரித்து குற்றவாளிகளுக்கு கடும் தண்டனைகளை வழங்கியிருக்கிறார். 43 மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்து, கழ் நிலை நீதிமன்றங்கள் வழங்கிய தர்ப்புகளை உறுதிசெய்துள்ளார்.

பெரும்பாலான வழக்குகளில் கழ்நிலை நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனையை அதிகரித்தும் தீர்ப்பு வழங்கி இருக்கிறார். இது வரை எந்தவொரு சர்ச்சைகளுக்கும் ஆளாகாதவர். ஆவணங்களையும், சாட்சிகளையும் அடிப்படையாக வைத்தே இவருடைய தீர்ப்பு இருக்கும்" என்கிறார்கள்.


குமாரசாமி தனி நீதிபதியாக நியமிக்கப்படப்போகிறார் என்ற தகவல் வெளியானவுடன், ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் அதிர்ந்து போயினர். நீதிபதி குமாரசாமி வழக்குகளை அணுகும் விதம் மற்றும் ஏற்கெனவே அவர் வழங்கிய தீர்ப்புகள் ஆகியவை குறித்து விலாவாரியாக விசாரித்த பிறகு மேலும் கலக்கம் அடைந்துள்ளனர். இந்தத் தகவலகள் அனைத்தும் ஜெயலலிதாவின் கவனத்துக்கும் போயிருக்கிறது.

யூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பாதுகாப்பாக வாக்குச் சாவடிக்கு செல்வதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்



**மக்கள் அச்சமின்றியும் பாதுகாப்பாகவும் வாக்குச் சாவடிக்கு செல்வதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அரச ஊடகங்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு சார்பாக செயற்படுவதை நிறுத்துமாறும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற பிரசார நடவடிக்கைகளின் போது பல வன்முறைச் சம்பவங்களும், மிரட்டல்களும் இடம்பெற்றன என இலங்கையை சேர்ந்த கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்தன.

வாக்காளர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், தாக்கப்படுதல், மிரட்டப்படுதல் போன்றவற்றை தடுப்பதற்காக இலங்கை அதிகாரிகள் சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் வேண்டுகோள் விடுத்தார்.

தேர்தல் பிரசார காலத்தின் போது இடம்பெற்ற சம்பவங்கள் வாக்களிப்பு தினத்தன்று இடம்பெறுவதையும், வாக்கு எண்ணும் பணி பாதிக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் வன்முறைகள் இடம்பெறலாம். எனவே பொலிஸாரும் ஏனையவர்களும் பக்கச்சார்பற்ற விதத்தில் நடந்து மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதை தேர்தல் ஆணையகமும் ஏனைய தரப்புகளும் உறுதி செய்யவேண்டும்.

குறிப்பாக சிறுபான்மையினர் வாழும் பகுதிகளில் இதனை செய்ய வேண்டும். தேர்தலுக்குப் பின்னர் இராணுவத்தினர் ஆற்றும் பங்களிப்பு இலங்கையில் எதிர்கால மனித உரிமைகள் நிலவரம் எவ்வாறு அமையும் என்பதை தெரிவிப்பதாக அமையும் என அடம்ஸ் மேலும் தெரிவித்தார். (இ-5)

## தேர்தல் முடிபுகளை உடனுக்குடன் அறிவிக்க கொழும்பு பல்கலையின் கணனிப்பிரிவு ஏற்பாடு

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்திலிருந்து உடனுக்குடன் அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பிரிவு மேற்கொண்டுள்ளதாக அப்பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் கிஹான் விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தற்சமயம் தனது கணனிப் பிரிவு இருபது பிரதான ஊடகங்களுடன் இணைய வழி தொடர்பு வசதிகளைக் கொண்டிருப்பதாகவும் தேர்தல்கள் செயலகத்தால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட முடிவுகளை அங்கிருந்தே உடனுக்குடன் தெரிவிப்பதற்காகத் தனது பிரிவின் 70 தொடக்கம் 80 உத்தியோகத்தர்கள் அங்கு பணியில் அமர்த்தப்படுவார்கள் எனவும் பேராசிரியர் கிஹான் விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்தார்.

இந்தச் சேவை தேவைப்படும் ஊடகங்கள் தேர்தல்கள் செயலகத்துடன் பதிவுசெய்து கொள்வதன் மூலம் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

### தேர்தல் வன்முறை விசாரணை ஆரம்பம்

ரம்புக்கணை ரயில் நிலையத்திற்கு அருகில், இரு அரசியற் கட்சிகளின ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பில், உதவி பொலிஸ்அத்தியட்சகர்கள்இருவரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.மோதல் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நேற்று முன்தினம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட் டமைப்பின் ஆதரவாளர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் மோதல் ஏற் பட்டுள்ளது.மோதலில் காயமடைந்தவர்களில் ஒருவர் கேகாலை பொது வைத்தியசாலையிலும், ஏனைய மூவர் ரம்புக்கணை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# போதைப்பொருள் வர்த்தகர்கள் 10 பேருக்கு சிவப்பு அறிவித்தல்

(கொழும்பு)

இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 10 நபர்களை கைது செய்வதற்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அதிகளவான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டில் 350 கிலோ கிராமும் 2014 ஆம் ஆண்டு 312 கிலோ கிராமுமாக மொத்தம் 662 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த பாரியளவான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டமைக்கு காரணம் இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தும் பிரதான நாடாக பாகிஸ்தான் இருப்பதுடன் அங்கிருந்து கொள்கலன்களில் இந்த போதைப்பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டமையாகும்.



போதைப்பொருட்களை கடத்திய சந்தேக நபர்கள் 2013 ஆம் ஆண்டு 23 ஆயிரத்து 665 பேரும் 2014 ஆம் ஆண்டு 23ஆயிரத்து 106 பேரும் மொத்த மாக 46 ஆயிரத்து 771பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக 46 ஆயிரத்து 708 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி வரை ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பான வழக்குகள் 92 ஆயிரத்து 742 பதிவாகியதுடன் அதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 92 ஆயிரத்து 950 ஆகும்.

அத்துடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு கஞ்சா போதைப் பொருள் தொடர்புடைய 85 ஆயிரத்து 591 வழக்குகள் பதிவானதுடன் 85 ஆயிரத்து494 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட 10 நபர்களை கைது செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபர்களை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் ஒருநாள் என்னைத் தேடி வந்தார். "நான் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ளப் போகிறேன்!" என்றார்.

நான் பயந்தே போய் விட்டேன். ஏனென்றால் அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் "உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம்! நாமும் கஷ்டப்பட்டு அதையும் கஷ்டப்படுத்த வேண்டாமே! என்றேன்.

அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்வதாகவே இல்லை. மிகவும் உறுதியுடன் இருந்தார். சரி... வேறு வகையில் அவரின் எண்ணத்தை மாற்றலாம் என்று நினைத்து, ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்தில் (மரம்) ஒரு பிரம்ம ராட்சசன் இருந்தான். அவன் ஒரு காலத்தில் பல பாவங்கள் செய்து சாபத்தினால் பிரம்ம ராட்சசனாக மாறியவன்.

சாப விமோசனத்துக்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உருவம் கிடையாது. அதனால் கண்களால் அவனைக் காணவும் முடியாது.

அந்தக் கோயிலில் ஒருவர் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார். வாசிக்கிறார் என்றே சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவுதான்! முறையாக பயிற்சி இல்லாதவர்.

தினமும் காலையிலும் மாலையிலும் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரது காலமும் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் அவர் நீண்ட நேரம் வாசித்து விட்டு, இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அந்த மரத்திலிருந்த பிரம்ம ராட்சசன் அவரிடம் போய் பரிதாபமாக பேசியது.

"இதோ பார்.... என்னை நீ கண்களால் பார்க்க முடியாது. இருந்தாலும் நீ வாசிப்பதை தினமும் நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் இவர். "இனிமேல் நீ வாசிப்பதை விட்டுவிட வேண்டும்!" என்றது. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர்.

"நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்து விட்டு சாப விமோசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன்தான்.... நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது!

என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை! இதேமாதிரி நீ தினமும் வாசித்தால் சாப விமோசனம் கிடைக்க முன்பே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன்.

இப்பொழுது உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்து விட்டேன்! என்றது. நீ சொல்வது சரிதான், நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை! இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு வழியில்லை!

சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விட்டு விட்டு என்ன செய்வது? என்றார் அவர்.

உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பை விட்டு விடுவாயா? என்று கேட்டது அது.

விட்டு விடுவேன்! என்றார் இவர்.

அப்படியானால் நான் சொல்வதைக்கேள்! இந்த ஊர் ராஜாவின் மகளைப் போய் நான் பிடித்துக் கொள்கிறேன். தன் மகளுக்குப் பேய் பிடித்து விட்டது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரிலுள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார்! நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன்.

கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. "நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்கிறேன்" என்று சவால் விடு. அதன் பின்னர் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன்.

உடனே ராஜா உனது திறமையைப் பாராட்டி பொன்னும் பொருளும் நிறைய கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சுகமாகக் காலம் தள்ளலாம்! என்று யோசனை சொன்னார்.

இவரும் யோசித்துப் பார்த்து விட்டு சரியென்று ஒத்துக் கொண்டார்.

இந்தத் திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறைய பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டுவிட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை.

சரி.... இவரை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டபின்னர்தான் நான் நாதஸ்வரம் கற்கும் யோசனையை கை விடுகிறேன்! என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? நீங்க நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால் நான் உங்களுக்கு உதவியாக தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்! என்றேன். அவ்வளவு தான்! ஆள் அம்பேல்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| செவ்வாய் | புது வருட கிரக நிலை | | குரு (வக்) |
| புதன் சுக்ரன் | | | |
| சூரியன் | சனி | | ராகு |

# புதுவருட பலன்கள் 2015

**குரு பார்க்கக் கோடி நன்மை!**
**“புகழ்” ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயறபடும் விருச்சிக ராசி அன்பர்களே!**

பிறக்கும் புத்தாண்டு உங்களுக்கு பெருமைகளைக் குவிக்கும் ஆண்டாகவே அமையப் போகின்றது. வருடத் தொடக்கத்திலேயே உச்சம் பெற்ற குரு, உங்கள் ராசியைப் பார்க்கிறார். எனவே, உடனடி நற்பலன்கள் வந்து சேரப்போகின்றது. குரு சந்திர யோகத்தோடும், புத-சுக்ர யோகத்தோடும் குரு மங்கள யோகத்தோடும் இந்தப் புத்தாண்டு பிறக்கின்றது. யோகத்தோடு பிறக்கும் ஆண்டு சகல யோகங்களையும் உங்களுக்கு வழங்கப் போகின்றது.

ஆண்டு பிறக்கும் பொழுதே ராசிநாதன் செவ்வாய் உச்சம்பெற்றிருக்கின்றார். லாபத்தைத் தரும் தனாதிபதி குருவும் உச்சம் பெற்றுள்ளார். எண்ணியதை முடிக்கும் விதத்தில் கன்னி ராசியில் ராகுவின் சஞ்சாரம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரியும் விதத்தில் சூரியனும் உலா வருகின்றார். எனவே செல்வவளம் பெருகும் விதத்திலும், செல்வாக்கு உயரும் விததிலும் இந்தப் புத்தாண்டு 2015 அமையப் போகின்றது.

இநதப் புத்தாண்டில் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. அதுவும் உச்சம்பெற்ற குருவாக இருப்பதால் நல்ல பலன்களைக் கொடுக்கலாம். பொருளாதார நிலை உயரும். புகழ கூடும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் வந்துசேரும். வீடு, வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். கட்டளைக்கு அடிபணிய பலரும் காத்திருப்பார்கள். கனவுகள் நனவாகும். சுற்றத்தார் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள்.

அதிர்ஷ்ட தேவதையின் அரவணைப்பிற்கு ஆளாகி, அகிலத்தார் பாராட்டும் விதத்தில் உங்கள் பணி மேம்படும். உங்கள் சுய ஜாதகத்தில் சனியின் ஆதிக்கம் எப்படி இருக கிறது? என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தற்சமயம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. சகாய ஸ்தானாதிபதியாகவே சனி வருவதால், அது ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஏராளமான நற்பலன்கள் உண்டாகும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். செல்வந்தர்களின் ஒத்துழைப்போடு சில நல்ல காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

புத்தாண்டின் கிரக நிலைகளை உங்கள வருடம் பிறப்பதால் தரணியாளும் யோகம் முதல் தனவரவு அதிகரிக்கும் யோகம்வரை உங்களுக்கு ஏற்படப் போகின்றது.

**1.1.2015- 4.7.2015**

வருடத் தொடக்கத்தில் குரு ராசியையும், மூன்றாமிடத்தையும், ஐந்தாம் இடத்தையும பார்க்கிறார். எனவே முன்னேற்றத்தின் முதற்படிக்குச் செல்லும் வாய்ப்பு கிட்டும். அந்நியர்களின் ஒத்துழைப்போடும், ஆற்றல் மிக்கவர்களின் பின்னணியோடும், எண்ணிய காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள். லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதும் யோகம்தான். கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்கும் ஆற்றலை பெற்றவர் ராகு.



எனவே, பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். மனப்பயம் அகலும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். தினம் ஒரு நல்ல தகவல் வந்துகொண்டேயிருக்கும். பதினொன்றில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, 5 இல் கேது சுஞ்சரிப்பார் அல்லவா?. எனவே, பாக்கிய ஸ்தானம் பலம்பெறவும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை உயரவும், ஏற்கனவே சொல்லியபடி எல்லா நாட்களும் நல்ல நாட்களாக அமையவும், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாக யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு பொருத்தமான ஸ்தலங்களைக் கண்டறிந்து அந்த திருக்கோவில்களில் சர்ப்ப சாந்திகளைச் செய்வதன் மூலம் சந்தோஷ சாம்ராஜ்யத்தில் உலா வரலாம்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருக்கும் இந்த நேரத்தில், ஒவ்வொரு சனிக்கிழமையும் சனிபகவான் சன்னிதியில் எள் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்வதோடு சனி கவசப் பாராயாணம் செய்வதும் நல்லது. கவசம் பாடினால் கவலைகள் தீரும். காசு, பணப் புழக்கம் அதிகரிக்கும். அதிகாலையிலேயே ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் வழிபடுவது மேலும் சிறப்புத்தரும். அருகம்புல்லும், வெற்றிலை மாலையும் இணைத்து, ஆதியந்தப் பிரபு படத்திற்கு அணிவித்து இல்லத்தில் வழிபாடு செய் திருமணம் கைகூடும். உறவினர் கைகொடுத்து உதவுவர். உத்தி யோகத்தில் உயர்வு கிடைக்கும். தொழில் செய்வோருக்கு தொகை வரவு திருப்தி தரும்.

9 இல் சஞ்சரிக்கும் குரு ஒளி மயமான எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கூடுதலாக கிடைக்கும். விரயச் சனியின் ஆதிக்கத்தில் ஏற்பட்ட கடன்சுமையைக் குறைக்க வேறு பல யுக்திகளைக் கையாளுவீர்கள். அரை குறையாக நின்ற பணி தொடரும்.

குருவின் பார்வை சகோதர ஸ்தானத்திலும், புத்திர ஸ்தானத்திலும் பதிகிறது. நீங்கள் செய்த பெரும் பாக்கியம் உங்களுக்கு ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றாலும், குருவின் அருட்பார்வை பதிந்த சனி என்பதால் தான், நன்மைகளை நாம் எதிர் பார்க்க முடிகின்றது.

விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். பல நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். பிள்ளைகள் உதிரி வருமானங்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். நல்ல இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ளும் வாய்ப்பு உருவாகும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களுக்கு நண்பராகி கேட்ட உதவிகளைச் செய்து கொடுப்பர்.

**6.7.2015- 31.12.2015**

இக்காலத்தில் குருபகவான் உங்கள் ராசிக்கு பத்தாமிடமான சிம்மத்தில் சஞ்சரிக்கின்றார். அங்கிருந்து கொண்டு தன் பார்வை பலத்தால் 2,4,6 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே வாக்கு, தனம, குடும்பம், வாகனம், சுகம், தாய் ஜீவனம் போன்ற ஆதிபத்யம் பெற்ற இடங்களில் எல்லாம் புனிதமடைகின்றன.




எனவே கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயறபடுவீர்கள். வாங்கல்-கொடுக் கல்கள் ஒழுங்காகும். வருமானம் இருமடங்காக உயரும். இதுவரை முடிக்க இயலாத காரியங்கள் இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். வாகனம் வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். பழைய வாகனங்களை கொடுத்துப் புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள். வீடு கட்டும் முயற்சிக்கு வித்திடுவீர்கள் வெளிவட்டாரப் பழக்க வழக்கம் கிரிவலம் வருவதன் மூலம் தொடர்ந்து நல்ல பலன்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**குருவின் வக்ர காலமும், சனியின் வக்ர காலமும்!**

வருடத் தொடக்கத்தில் வக்ரமாகும் குரு 14.04.2015 வரை வக்ரம் பெறுகிறார். அதே நேரத்தில் சனிபகவான் 15.03.2015 இல் விருச்சிகத்தில் வக்ரம் பெறுகிறார். 12.06.2015 முதல் 05.09.2015 வரை துலாத்தில் சனி வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலத்தில் கூடுதல் கவனத்துடன் செயறபடுவது நல்லது. கொடுக்கல் வாங்கல்களிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாகும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. சனியின் வக்ர காலத்தில் உடன் பிறப்புகளையும், உடனிருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வதுதான் நல்லது.

சுபவிரயங்களை செய்வதன் மூலம் வீண் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும். குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்பதற்கிணங்க மற்றவர்கள் செய்யும் குற்றத்தை பொருட்படுத்தாமல் அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். பணிகளில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலம் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

வருடத் தொடக்கத்திலேயே வளர்ச்சி நன்றாக இருக்கிறது. குரு பார்வையால் குடும்ப முன்னேற்றம் கூடும். கூட இருப்பவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். சொந்த பந்தங்களால் நன்மை உண்டு. சொத்துக்களை உங்கள் பெயரிலேயே வாங்கும் யோகம் உண்டு.

கணவன்-மனைவிக் குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உத்தி யோகத்திலுள்ள பெண்கள் தனித்துத் தொழில் செய்ய முன்வருவர். அன்னிய தேச யோகம்கூட ஒரு சிலருக்கு வந்து சேரும். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நன

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

வாக்குவீர்கள். வாரிசுகளால் உதிரி வருமானம் கிடைக்கும். லாப ஸ்தான ராகுவாலும் பஞ்சம கேதுவாலும் பொருளாதார நிலை உயர யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்தி பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

## குரு பார்க்க கோடி நன்மை!

சுய ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, திசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை யோக பலம் பெற்ற நாளில், அனுகூலம் தரும் ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வந்தால் வெற்றி மீது வெற்றி வந்துசேரும்.

2015 ஆம் ஆண்டு சனிக்குரிய ஆண்டாக “8” என்ற எண் ஆதிக்கத்தில் பிறப்பது யோகம்தான். சனிக்கு நட்பு கிரகமான சுக்ரனுக்குரிய பரணி நட்சத்திரத்தில், புதிய வதும் உகந்தது. எதிர்காலம் இனிமையாக அமைய இவைகளெல்லாம் நல்ல வழிமுறைகளைகள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**குருவின் பார்வை பலன்கள்!**

ஆண்டின் தொடக்கத்தில் குருபகவான் பஞ்சம பார்வையாக உங்கள் ராசியைப் பார்ப்பதால், நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். திறமை பளிச்சிடும். விரிவடையும். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள், மின்சாதனப் பொருட்கள் என்று விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த மாறுதல் கிடைத்து ஊதிய உயர்வும் ஏற்படும். உயரதிகாரிகளின் அனுகூலத்தால் வெளிநாட்டு அனுகூலமும் வந்து சேரும். பௌர்ணமி அன்று

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும், சனிபகவானையும் வழிபட்டு வாருங்கள். நிலவு நிறைந்த நாளில் கிரிவலம் வந்து சிவாலய வழிபாடு செய்வதன் மூலமும், முருகப் பெருமானை வழிபடுவதன் மூலமும் முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள் ளலாம்.

நாளை தனுசு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பனிக்குடம் உடைந்தும் உயிர்வாழ்ந்த குழந்தை



பொதுவாக பிறந்த சிசுவொன்றின் எடை, 3.4 அல்லது 2.7-4.6 கிலோகிராம் கொண்டதாக இருந்தால் தான், அது ஆரோக்கியமான சிசு என்று வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றனர்.

அவ்வாறிருக்கையில் உள்ளங்கையை விட சிறிதாக பிறந்த சிசு தனது 1ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியுள்ளது.

இங்கிலாந்திலுள்ள வைத்தியசாலையில் பிறந்த சிசுவே இவ்வாறு அதனது பிறந்த தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடியுள்ளது. குறித்த சிசு, தாயின் வயிற்றில் 20 கிழமைகள் வளர்ந்தவுடன் தாயின் கருப்பையில் உள்ள நீர்ப்பை உடைந்துள்ளது.

சிசு இறந்திருக்கும் என்று வைத்தியர்கள் கருதினாலும் தாயின் பாசமும் தந்தையின் அரவணைப்பும் அச்சிசுவை 5 கிழமைகள் உயிருடன் கருப்பையில் வாழ வைத்துள்ளது.

5 கிழமைகளின பின்னர் சிசு அறுவைசிகிச்சை மூலம் வெளியில் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கருப்பையின் நீர்ப்பபை உடைந்தும் சிசு உயிர்வாழ்ந்திருப்பது மிகவும் அதிசயத்தக்க விடயம் என்று, தாய்க்கு அறுவைசிகிச்சை செய்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

# குண்டுத் தாக்குதல் 30 பேர் உயிரிழப்பு

### ஏமனில் அதிகாலை வேளை பயங்கரம்

(சனா)

**ஏமனில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் சிக்கி 30 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள அதேவேளை தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.**

இந்த சோகச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஏமனின் தலை நகரான சனாவில் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ள குண்டுவெடிப்பில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. பொலிஸ் கல்லூரிக்கு வெளியில் இந்த கார் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. மாணவர்கள் கூட்டத்துக்கு அருகில் கார் குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது. நகரத்தில் குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதுடன், பாரிய புகை மூட்டம் காணப்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏமனில் இந்த வருடத்தில இடம்பெற்ற நான்காவது பாரிய குண்டு வெடிப்பு சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த சம்பத்துடன் தொடர்புடைய தீவிர வாத அமைப்பு எது என இன்னும் அறியப்படவில்லை.(இ-5)




## ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் பிடியிலிருந்த முக்கிய நகரினை குர்திஷ் படை மீட்டுள்ளது

(பக்தாத்)

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சில பகுதிகளை கைப்பற்றி இஸ்லாமிய தேசம் என்ற பெயரில் நாட்டை உருவாக்கி உள்ளனர்.

அந்த பகுதிகளை மீட்பதற்கு ஈராக் மற்றும் சிரியா படைகளும், குர்திஷ் படைகளும் போரிட்டு வருகின்றன. அவர்களுக்கு ஆதரவாக அமெரிக்க கூட்டு படைகள் வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈராக், சிரியா எல்லையில் காபோன் என்ற நகரம் உள்ளது. மிக முக்கிய நகரமான இதை கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினார்கள். மேலும் காபோன் மாவட்டம் முழுவதையும் ஐ.எஸ்.ஐ.எஸ். படை கைப்பற்றியிருந்தது.

இதை மீட்க குர்திஷ் படைகள் தொடர்ந்து போரிட்டு வந்தன. கடந்த ஒரு வாரமாக குர்திஷ் படைக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிக்கும் இடையேகடுமையானசண்டை நடந்து வந்தது.



அவர்களுக்கு ஆதரவாக அமெரிக்க படை 11 முறை விமான தாக்குதல் நடத்தியது. இதில்ஏராளமான ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளின் முகாம்கள் அழிக்கப்பட்டன.

இதை பயன்படுத்தி குர்திஷ் படை முன்னேறியது. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அங் கிருந்து பின்வாங்கினார்கள். இதன் காரணமாக தற்போதுகாபோன் நகரம் முழுவதையும் குர் திஷ் படை மீட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காபோன் மாவட்டத்தின் 80 சதவீத பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டதாகவும் குர்திஷ் படை கூறியிருக்கிறது.

தற்போது அருகிலுள்ள மக்தலா, கான்கோடான் மாவட்டங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். படையிடம் இருந்து மீட்பதற்காக குர்திஷ் படை முன்னேறி வருகிறது.

இதற்கிடையே ஈராக்கில் உள்ள அர்பான் என்ற இடத்தில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் இராணுவ முகாம்கள் மீது திடீர் தாக்கு தல் நடத்தினார்கள். இதில் 23 வீரர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தீவிரவாதத்தை அழித்து ஒடுக்குவதில் பாகிஸ்தானுக்கு நற்சான்று தரவில்லை

### அமெரிக்கா அறிவிப்பு

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட லஷ்கர் இ-தொய்பா, ஜெய்ஷ் இ-முகமது ஆகிய இரு தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளில் திருப்தி அடைந்து அமெரிக்கா நற்சான்றிதழ் அளித்ததாகவும், 532 மில்லியன் டொலர் (சுமார் ரூ.3,192 கோடி) நிதி உதவிக்கு அமெரிக்க பாராளுமன்றம் ஒப்பதல் வழங்கியதாகவும், தகவல்கள் வெளியாகின.

ஆனால் இதை அமெரிக்கா மறுத்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஜென் சர்கி வோஷிங்டனில் நிருபர்களிடம் பேசுகையில், "பாகிஸ்தானுக்கு தீவிரவாத ஒழிப்பில் நிதி உதவி செய்வதற்காக நற்சான்று எதுவும் கோரப்படவில்லை. 2013ஆம் ஆண்டுக்கு பின்னர் நிதி எதுவும் வழங்கப்படவும் இல்லை" என கூறினார்.

மேலும், பாகிஸ்தானுக்கு தீவிரவாத ஒழிப்பு தொடர்பாக புதிதாக நிதி வழங்குவதற்கு பாராளுமன்றம் எந்த வேண்டுகோளையும் பதிவு செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் இந்தியா பயணமாகிறார்

ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு இவ்வாரம் இந்தியா பயணமாகிறார்.

இவ்விஜயத்தின் போது இந்திய தலைவர்களுடன் கூட்டங்கள், கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார் என பொதுச்செயலாளரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் உறுதி செய்துள்ளார். இதுபற்றி மேலும் கருத்து தெரிவித்த பேச்சாளர், பொதுச்செயலாளர் பெரும்பாலும் தலைநகரம் டில்லியிலும் குஜராத் மேற்கு பிரதேசங்களில் தங்குவார் என்றும் வெளியிட்டுள்ளார்.

இவ்விஜயத்தின்போது அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவ்ராஜ் ஆகியோரோடு விசேட பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பங்களாதேஷில் எதிர்க் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவர் கைதானார்

(டாக்கா)

பங்களாதேஷ் எதிர்க் கட்சித் தலைவர் கலிதா ஜியாவின் மகனின் பேச்சை ஒளிபரப்பு செய்த தொலைக் காட்சியின் தலைமை நிர்வாகி கைது செய்யப்பட்டிருக்கிறார். அந்த தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நாட்டின் பல்வேறு பகுதிகளில் தெரியவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன.

இந்த குறிப்பிட்ட தொலைக்காட்சிக்கு எதிராக கொடுக்கப்பட்டிருக்கும் ஆபாச தடுப்புச் சட்டப்பிரிவுகளின் கீழான வழக்கு தொடர்பிலேயே அந்த தொலைக்காட்சியின் தலைமை நிர்வாகி கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் பொலிஸாரின் இந்த குற்றச்சாட்டு திசை திருப்பும் நடவடிக்கை என்று கூறிய தனியார் தொலைக் காட்சியின் சார்பில் பேசவல்ல அதிகாரி, எதிர்க்கட்சித்தலைவரின் மகனுடைய உரையை ஒளிபரப்பியதாலேயே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.

கடந்த ஆண்டு நடந்து முடிந்த பங்களாதேச பொதுத் தேர்தலின் ஆண்டு நிறைவை ஒட்டி, வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசினாவின் ஆதரவாளர்களுக்கும் பிரதான எதிர்க்கட்சியான வங்கதேசத்தின் தேசிய கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையிலான அரசியல் மோதல்கள் அதிகரித்து வந்திருக்கின்றன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் நாட்டின் பிரதான வீதிகள் அனைத்திலும் வீதி மறியலில் ஈடுபடுமாறு கலிதா ஜியா தமது கட்சிக்காரர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அவுஸ்திரேலியாவில் அமெரிக்கர் 2 பேர் பலி

அவுஸ்திரேலியாவில் ஆல்ப்ஸ் மலைத்தொடரில் அமெரிக்காவைச் சேர்ந்த மலை ஏற்ற வீரர்கள் ரோன்னி பெர்லக் (வயது 20), பிரிசி அஸ்டில் (வயது 19) ஆகியோர் மலை ஏற்ற பயிற்சியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

அப்போது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் 2 வீரர்களும் கீழே விழுந்து உயிரிழந்தனர். அவர்களுடன் சென்ற 4 வீரர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். வீரர்களின் உயிரிழப்புக்கு அமெரிக்க மலையேறும் வீரர்கள் சங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே பயிற்சியில் ஈடுபட்ட வீரர்கள் தற்காப்பு கருவிகளை உடன் கொண்டு செல்லாததே விபத்துக்கு காரணம் என்று அவுஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்து உள்ளன. (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியானந்தாவின் ஆசிரமத்தில் பெண் மர்மமான முறையில் மரணம்



நித்தியானந்தாவின் ஆசிரமத்தில் உயிரிழந்த பெண்ணின் மரணத்தில் மர்மம் இருப்பதாக எழுந்த புகாரையடுத்து, அவரது உடல் மறு பிரேத பரிசோதனை செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நித்தியானந்தாவின் பெங்களூர் ஆசிரமத்தில் சீடராக தங்கியிருந்த சங்கீதா என்ற பெண் கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி மரமமான முறையில் மரணமானாா. இவரது மரணத்தில் மர்மம் இருப்பதாக கூறி அவரது தாயார் ஜான்சி ராணி திருச்சி ராம்ஜி நகர் பொலிஸ் நிலையத்திலும், கர்நாடக மாநிலம் ராம் நகர் மாவட்ட துணை கண்காணிப்பாளர் ஆர்.குப்தாவிடமும் புகார் அளித்தார். இதனையடுத்து சங்கீதாவின் உடலை மறு பிரேத பரிசோதனை செய்ய முடிவு செய்தனர், நேற்று முன் தினம் காலை கர்நாடகத்திலிருந்து பிடரி பொலிஸ் நிலைய எஸ்.ஐ லோகித் தலைமையிலான மூன்று பொலிஸார் அடங்கிய தனிப்படையினர் திருச்சி வந்தடைந்தனர். முதலில் திருச்சி மாவட்ட எஸ்பி ராஜேஸ்வரியைச் சந்தித்து, மறு பிரேத பரிசோதனை நடத்துவதறகான அனுமதி கடிதத்தை வழங்கினர். அடுத்து திருசசி அரசு மருத்துவக கல்லூரிக்குச் சென்று உடற்கூற்றியல் தலைமை மருத்துவர் சரவணனை சந்தித்து, மனுவை வழங்கினார்கள் எனபது குறிப்பிடததக்கது. (இ-5)




# கோர விபத்தால் 20 பேர் மரணம்

**இந்தியாவின் ஆந்திரமாநிலத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 20 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**



இந்த விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, ஆந்திர மாநிலம் அனநதபுரம் மாவட்டத்தில் மடக்க சிறா என்ற இடம் உள்ளது. இங்கிருந்து போதுகுண்டாவுக்கு நேற்று காலை 8.30 மணியளவில் அரசு பேருந்து ஒன்று புறப்பட்டது.

இது கிராமப்புற மக்களுக்காக இயக்கப்படம் 60இற்க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். இதில் பெரும்பாலானோர் பாடசாலை மாணவர்கள். பேருந்து மடக்கசிறா ஊரை கடந்து செல்லும் போது, பேருந்து ஒரு வளைவில் திரும்பும் போது கட்டுப் பாட்டை இழந்து 60 அடி பள் ளத்தில் உருண்டு விழுந்து கவி ழ்ந்தது. எதிர்பாராமல் நடந்த இந்த விபத்தில் பேருந்து முழுவதும் நொறுங்கி சிதைந்தது. பேருந்தில் இருந்தவர்கள் அலறி துடித்தனர். பெரும்பாலானோர் இடிபாடுகளிடையே சிக்கினார்கள். இருந்த 20 பேர் சம்பவ இடத்தில் உடல் நசுங்கிபரிதாபமாக உயிர் இழந்தனர். பயணிகளின் அலறல் சத்தம் கேட்டு அருகில் உள்ள கிராம மக்கள் அங்கு ஓடி வந்து, உயிருக்கு போராடியவர்களை மீட்டனர்.

பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மிக பலத்த காயம் அடைந்தவர்கள் பெங்களூர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். மற்றவர்கள் இந்துபுரம் அரசு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

விபத்தில் இறந்தவர்களுக்கு ஆந்திர முதலமைச்சர் சந்திர பாபு நாயுடு இரங்கல் தெரிவித்துள்ளார. காயம் அடைந்தவர்களுக்கு உயர் சிகிச்சை அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆந்திர கல்வி அமைச்சர் ஸ்ரீனிவாஸ், இந்த விபத்தில் 12 பேர் இறந்து இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அமைச்சர் ரகுநாத ரெட்டி சம்பவ இடத்துக்கு ஹெலியில் சென்று பார்வையிட்டுள்ளார் (இ-5)

# முன்னாள் மத்திய அமைச்சர் சசிதரூரின் மனைவி கொலை

## அதிர்ச்சி தகவல் வெளியீடு



முன்னாள் மத்திய அமைச்சர் சசிதரூரின் மனைவி சுனந்தா புஷ்கர் கொலை செய்யப்பட்டுள்ளதாக டில்லி பொலிஸ் ஆணையாளர் பீம் சயின் பாஸ்ஸி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய பீம் சயின் பாஸ்ஸி, இந்த வழக்கில் இதுவரை பெறப்பட்டுள்ள மருத்துவ பரிசோதனை ஆதாரங்களை கொண்டு இந்த முடிவுக்கு வந்துள்ளதாக கூறினார். அதனால் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 302இன் கீழ் வழக்கு பதியப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் இந்த வழக்கில் குற்றவாளியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றும், அது தொடர்பிலான விசாரணைகள தீவிரப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தாா.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் சுனந்தா புஷ்கர், டில்லியில் உள்ள நட்சத்திர விடுதியின் அறையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார். அளவுக்கு அதிகமாக மருந்து உட்கொண்டதால் சுனந்தா இறந்திருக்கலாம் என்று டில்லி பொலிஸ் துறையினர் அப்போது தெரிவித்திருந்தனர். இவர் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் சசிதரூரின் டுவிட்டர் கணக்கி லிருந்து வெளியான தகவல்கள் மூலம் சசிதரூர் திருமணத்திற்கு வெளியிலான தொடர்பு வைத்துள்ளார் என்ற சர்ச்சை எழுப்பியிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து சந்தேகம் ஏற்படுத்தும் வகையிலான ஆதாரங்கள் கிடைக்கும் வரை, இந்த வழக்கின் விசாரணைகள் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 174 ஆம் பிரிவின்கீழ் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சுனந்தா புஷ்கர் மரணம் தொடர்பில் அடையாளம் தெரியாதோர் மீது டில்லி பொலிஸார் கொலை வழக்குப் பதிவு செய்துள்ளது குறித்த செய்தி, தம்மை அதிர்ச்சியில் ஆழத்தியுள்ளதாக, சசிதரூர் தெரிவித்துள்ளார். தன்னுடைய மனைவியன் மரணத்தில் எவ்வித சதிச்செயலும் இல்லை என்றே தாம் இதுநாள் வரை கருதிவந்துள்ளதாகக் கூறியுள்ள தரூர், விசாரணை தொடர்பாக தான் முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்று உறுதியளித்துள்ளார் பொலிஸ் எந்த அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்தார்கள் என்பதையும் தமக்குத்தெரியப்படுத்த வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் சுனந்தா புஷ்கர் மரணத்தில் நீடித்து வந்த மர்மத்தில் முதல்கட்டமாக அது கொலை தான் என்று ஆதாரங்கள் காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஜெயா வழக்கினை அரசியலாக்கினால் நடவடிக்கை திமுகவுக்கு கர்நாடக உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

ஜெயலலிதா மேல்முறையீட்டு மனு மீதான விசாரணையை அரசியலாக்கி, இழுத்தடிக்க வேண்டாம் என திமுக சட்டத்தரணிக்கு கர்நாடக உயர் நீதிமன்ற சிறப்பு நீதிபதி சி.ஆர்.குமாரசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை 3ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

முன்னதாக நேற்று முன்தினம் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு வழக்கில் இருந்து அரசு சட்டத்தரணி பவானி சிங்கை நீக்க வேண்டும் என்று திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகன் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது திமுக தரப்பில் சட்டத்தரணி குமரேசன் ஆஜரானார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு சட்டத்தரணி பவானிசிங் தொடர்ச்சியான செயற்பாடுகள் ஆட்சேபத்திற்குரிய வகையில் இருக்கிறது. அவருடைய செயல் திருப்திகரமாக இல்லை என்றார்.

இதற்கு பதிலளித்த நீதிபதி குமாரசாமி, பவானி சிங் கர்நாடக அரசின் உத்தரவின் பேரிலேயே வழக்கில் ஆஜராகியுள்ளார். விசாரணை நியாயமான முறையிலேயே நடைபெற்று வருகிறது. வழக்கு விசாரணையை 3 மாதகாலத்திற்குள் முடிக்குமாறு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது நினைவிருக்கிறதல்லவா? மனு விசாரணையை அரசியலாக்கி, இழுத்தடித்தால் குற் றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 345 இன் கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வரும் என எச்சரித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீய பழக்கங்களிலிருந்து நாம் விடுபடுவது எப்படி?

தீய பழக்கங்களை விடாப்பிடியாக வைத்திருக்கவேண்டும் என்று யாரும் ஆசைப்படுவதில்லை.

தவறான சிந்தனைகளால் விளையாட்டாக ஆரம்பிக்கிற சில தீய ஈடுபாடுகள், பழக்கங்களாக மாறி, அசுரத்தனமாகப் பிடியை இறுக்கும் போதுதான் அதன் விபரீதத்தைப் பலரும் உணர்கிறார்கள். தீய செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகையில் அது நம்மனதில் வேரூன்ற ஆரம்பிக்கின்றது.

ஆழ்மனம் அதை மகிழ்ச்சி, திருப்தி என அர்த்தப்படுத்திக்கொண்டும் அது இல்லாவிட்டால் சங்கடம், அதிருப்தி என மிகைப்படுத்திக் கொண்டும் விடுவதாக மனவில்ய அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே தீய பழக்கங்களிலிருந்து விடுபடுவது எளிதாக இருப்பதில்லை.

எத்தனை வயதானாலும் சரி அப்பழக்கம் எத்தனை காலமாக இருந்தாலும் சரி அதை விட்டுவிட உறுதியாய் விரும்பினால் எந்நேரத்திலும் அதிலிருந்து விடுதலை பெற முடியும்.

பலரது முயற்சிகள் வெற்றி பெற முடியாமல் போவதற்கு அவர்களது எண்ணம் மேலோட்டமாகவும் பழக்கம் ஆழ்மனதிலும் இருப்பதே காரணம் என மனோதத்துவ நிபுணர்கள் கருதுகிறார்கள்.

வேரோடு அந்தப் பழக்கத்தைப் பிடுங்கி எறிய மேலோட்டமான எண்ணங்களுக்குச் சக்தி இருப்பதில்லை என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆலன் மார்லட் (Alan Marlatt) என்ற உளவியல் ஆய்வாளர் தீய பழக்கத்தினால் ஏற்படும் தீய விளைவுகளை, பிரச்சினைகளைத் தெளிவாக எழுதியுள்ளார்.

அதுதான் தெரியுமே என்று கூறுவதை விட்டு அவற்றை வரிசைப்படுத்தி எழுதி வைத்துக்கொண்டு அடிக்கடி அதைப் பார்வையிடுவது அவற்றிலிருந்து விடுபட மன உறுதியை அதிகரிக்கும் என்பது அவரது ஆராய்ச்சி.

வேறு ஒரு தத்துவஞானியோ அப்பழக்கத்தை எதிரியாக மனதில் பாவிக்கச் சொல்கிறார். அப்பழக்கத்தை நீ வைத்துக்கொண்டு இருக்கிறாய் என்று நீ நினைக்கிறாய். உண்மை என்னவென்றால் அப்பழக்கத்தின் பிடியில்தான் நீ இருக்கிறாய்.

இத்தெளிவான உண்மை விளங்க ஆரம்பிக்கையில் இதுவரை சந்தோசத்துடன் அந்தப் பழக்கத்தைச் சம்பந்தப்படுத்தி வந்த ஆழ்மனதிற்கு உண்மை நிலைவரம் சென்றடைகிறது. தீயதைத் தீயதென முற்றிலும் உணர்வதே அதைக் களைய நமக்கு உதவும் முதல் ஆயுதம்.

அடுத்தது அப்பழக்கத்திற்குச் சாதகமான அல்லது அப்ப ழக்கத்தை ஊக்குவிக்கும் அனைத்துச் சூழ்நிலைகளையும் களைய வேண்டும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

உதாரணத்திற்கு புகைபிடிக்கும் பழக்கத்தைவிட விரும்பும் ஒருவன் தன் புகைபிடிக்கும் சகாக்களைச் சந்திப்பதையும் அவர்களுடன் சேர்ந்து அதிக நேரமிருப்பதையும் தவிர்க்க வேண்டும். அதற்கு எதிர்மாறான சூழ்நிலைகளில் எதிர்மாறான நற்பழக்கங்கள் உள்ளவர்களுடன் அதிகமிருப்பது நல்லது.

**யோகி ராமசாரகா கூறுவார்;**

ஒரு செடிக்குத் தேவையான மண்ணோ, நீரோ கிடைக்காமல் இருந்தால் குறுகிய காலத்தில் அச்செடி தானாக இறந்து விடும். அதுபோல தீய பழக்கத்தை அழிக்கவேண்டுமென்றால் அது குறித்து எண்ணம் எழும் போதெல்லாம் உன் மனதைத் திசை திருப்ப வேண்டும். எண்ணங்களே உணவு. அதைத் தராமல் இருந்தால் அது தானாக அழிந்துபோகும்.

பெரும்பாலும் ஓய்வு நேரங் களே தீய பழக்கங்கள் ஏற்பட மூலகாரணமாக இருக்கின்றன என்பது ஆராய்ச்சியாளர்களின் ஒருமித்த கணிப்பு. அந்த நேரங்களில் பயனுள்ள நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபடுவது என முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடத்தல் நல்லது.

இப்படியெல்லாம் மிகக் கவனமாக நடந்துகொண்டு தீய பழக்கத்தின் பிடியில் இருந்து விடுபட ஆரம்பிக்கும்போது இந்த ஒருமுறை மட்டும்... என அந்தப் பழக்கம் தலையெடுக்கும் அபாயத்தைக் குறித்து வில்லியம் ஜேம்ஸ் என்ற மனோதத்துவமேதை எச்சரிக்கிறார்.

ஒருமுறை தானே என்ன ஆகிவிடப்போகிறது என நினைப்பது கூட அந்தப் பழக்கத்திற்கு உரமாகக் கூடும். அப்படியோர் எண்ணம் எழுந்தால் அந்தக்கணமே அதற்குச் சமாதி கட்டுவது உத்தமம்.

அதுகுறித்த எண்ணம் எழுந்தவுடனேயே, யோகிராமசாரகா கூறியது போல மனோபலத்துடன் மனதைத் திசை திருப்பக் கற்றுக்கொள்ள வேண்டும். சில நிமிடங்களில் அந்த எண்ணம் பலமிழந்து போகும்.

அப்படி ஒருமுறை சறுக்கி விட்டாலும் அதையே பெரிதுபடுத்தி வருந்தி மனவுறுதியை இழப்பதை விட அது ஏன் நிகழ்ந்தது? எங்கு கவனக் குறைவாய் இருந்தோம்? என்று ஆராய்ந்து கண்டுபிடித்து இனியொருமுறை இதுபோன்ற சந்தர்ப்பம் வந்தால்எப்படி அதை எதிர்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அடுத்தமுறை தவறு ஏற்பட எப்போதெல்லாம் என்னவெல்லாம் வாய்ப்புக்கள் உள்ளன என்று முன்கூட்டியே யோசித்து வைத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சமயங்களில் எப்படி நடந்து கொள்வது என மனதில் ஒத்திகை பார்த்துக்கொள்வது வெற்றிக்கு நிச்சயமான வழி.

உதாரணத்திற்கு குடிப்பழக்கத்தை விட நிச்சயித்திருப்பவன் வேண்டப் பட்ட ஒருவர் குடிக்க கம்பனி தர வற் புறுத்தினால் அதை எப்படித் தவிர்ப் பது என முன்கூட்டியே ஒத்திகை பார்த்து வைத்திருந்தால் அச்சந்தர்ப் பம் வரும்போது அநாயாசமாகத் தன்னுறுதியை நிலை நிறுத்த முடியும்.

பலருக்கும் தீய பழக்கங்கள் என்றால் புகைப்பழக்கம், மது, போதைப்பழக்கம் போன்றவையே என்கிற அபிப்பிராயம் உண்டு. ஆனால் அந்த முத்திரையைப் பெறாமல் நம்மிடம் எத்தனையோ தீய பழக்கங்கள், தீய குணங்கள் இருக்கக்கூடும். சோம்பல், பொறுப்பின்மை, அவதூறு கூறுதல் என்று தீயகுணங்களுக்கு அளவேஇல்லை.

இன்றே இதுபோன்ற ஏதாவதொரு தீய பழக்கத்தையோ தீய குணத்தையோ விட்டொழிக்க ஒவ்வொருவரும் ஒரு தீர்மானத்தை உறுதியாக உண்மையாக மேற்கொள்ள வேண்டும். உயர்ந்த விடயங்கள் எதுவும் சுலபமாகக் கடைப்பிடிக்கக்கூடியவை அல்ல

பார்த்தீனியத்தை (விஷச்செடி) யாரும் விதைக்க வேண்டியதில்லை. ஆனால்ஒருநல்லசெடியை விதைத்து வளர்க்க நாம் நிறைய முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கிறது. வளர்ந்த பின்னும் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கவேண்டியுள்ளது.

ஆனால் அதன் பலனை அனுபவிக்கையில் கிடைக்கிற மனநிறைவும் ஆனந்தமும் கொஞ்ச நஞ்சமல்ல. அதை அனுபவிக்க முதலில் தீயதை நீக்குவோம். நல்லதைப் பெருக்குவோம்.

**நெல் செய்யப் புல் தேயும்!**

**நன்றி: அருள் ஒளி**

# எச்சரிக்கை

## இலக்கத்தகடுகளற்ற வாகனங்களை பொலிஸ் பிடிக்கும்!

எதிர்வரும் சில தினங்களுக்கு இலக்கத் தகடுகள் இன்றி பயணிக்கும் வாகனங்களை தம்வசப் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இவ்வாறான வாகனங்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாகவும் சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் கூறினர்.


இதன்படி எதிர்வரும் சில நாட்களுக்கு வாகன இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்கள், பதிவு செய்யப்படாத வாகனங்கள், போலி இலக்கங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள், இலக்கங்கள் தெளிவற்ற வாகனங்கள் போன்றன பொலிஸாரினால் தடுத்து வைக்கப்படவுள்ளன.

வி.ஐ.பி மற்றும் வி.வி.ஐ.பி ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட வாகனங்களும் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைகேடுகள் இடம் பெறுவதனை தடுக்கும் நோக்கில் இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (இ-5)

# பிரதேச சபை உப அலுவலகம் துரிதகதியில் புனர்நிர்மாணம்





பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகமான செம்பியன் பற்று பிரதேச சபை துரிதகதியில் மீள்புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்த பிரதேச சபைக் கிணறு தண்ணீர்த்தாங்கி, மலசல கூடம் என்பனவும் சுற்று மதி லும் மீள நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

செம்பியன்பற்று பிரதேச சபையின் பொறுப்பதிகாரி சிறிகாந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவனின் ஏற்பாட்டில் துரிதமாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை மேற்படி உப அலுவலகத்திற்கென ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றும் தனியான நூலகம் ஒன்றும் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ-64)

# இந்துப் பெண்களுக்கு நான்கு குழந்தைகளாம்

## சர்ச்சையில் மீண்டும் பா.ஜ.க

(புதுடில்லி)



பிரதமர் நரேந்திர மோடி பொருளாதார சீர்திருத்தம் குறித்த கொள்கையில் ஈடுபாட்டுடன் செயற்படுவதுடன் தனது கட்சியின் சட்ட அமைப்பாளர்களிடம், இந்துத்துவா கொள்கைகளை ஊக்குவிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு கூறுவதை தவிர்க்கும் வகையில், அது தொடர்பான அறிக்கைகளை வெளியிட வேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்திருந்தார்.

ஆனால், உத்தர பிரதேசத்தை சேர்ந்த பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்த 58 வயதான சாக்ஷி மகாராஜ் மதம் தொடர்பான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு நேற்றுமுன்தினம பேசும் போது, ஒரு இந்து பெண் குறைந்தது 4 குழந்தைகளையாவது பெறறு கொள்ள வேண்டும். ஒன்றை இராணுவத்துக்கு சேர்த்து விட வேண்டும். மற்றொன்றை எங்களை போன்ற மதத்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கொடுத்து விட வேண்டும் என்று கூறி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.


பாரதீய ஜனதா கட்சியின் எம்.பி. சாக்ஷி மகாராஜ் கருத்தின்படி, இந்து பெண்கள் நான்கு குழந்தைகளை கொண்டிருக்க வேண்டும். குழந்தைகள் கூட பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் தொடர்பான எண்ணிக்கைக்கு உரியவர்களாக இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சஞ்சய் ஜா தெரிவித்தார்.

கார் வாப்சி என்னும் நிகழ்ச்சி மூலம் இந்து அமைப்புகள் கட்டாய மதமாற்றம் செய்வதாக நாடு முழுவதும் பெரும் சர்ச்சை வெடித்த நிலையில், ஒவ்வொரு குழந்தையும் முஸ்லிமாகவே பிறக்கின்றன என்று அகில இந்திய மஜ்லிஸ்இ இததிஹாதுல் முஸ்லிம் கட்சியின் தலைவர் அசாதுதின் ஓவைசி கூறி அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பா.ஜ.க உறுப்பினரின் கருத்துக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 79086 பேரும் மன்னாரில் 78433 பேரும் வாக்களிக்க தகுதியானவர்கள்



(கிளிநொச்சி)

இன்றைய தினம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 96 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறுமென கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் ஏற்பாடு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 79 ஆயிரத்து 86 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மக்கள் வாக்களிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையில் சிறிய தேர்தல் வன்முறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன, பெரியளவில் எதுவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லையென அவர் மேலும் கூறினார்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் 78 ஆயிரத்து 433 வாக்காளர்கள் வாக்க ளிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலக உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கி ன்றன.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 32 வாக்களிப்பு நிலையங்களும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 12 வாக்களிப்பு நிலையங்களும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 8 வாக்களிப்பு நிலையங்களும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 6 வாக்களிப்பு நிலையங்களும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 12 வாக்களிப்பு நிலையங்களுமாக 70 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் வாக்களிப்பதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட் டுள்ளதாக அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இரு வன்முறைகள் பதிவு**

மேலும் நேற்று முன்தினம் நண்பகல் வரை, தேர்தல் வன்முறைகள் குறித்த 2 முறைப்பாடுகள் மாத்திரமே பதிவாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவித்தார். அது குறித்து அவர் கூறுகையில்,

தேர்தல் பணிக் காக ஆயிரம் அரச அதிகாரிகள் நியமிக்கப்ப ட்டுள்ளனர்.70 வாக்களிப்பு நிலையங்க ளிலும் சுமார் 248 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் கிரா மத்திற்குச் செல்லும் பாதை சீரின் மையினால் விசேட வானூர்தி மூலம் வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதோடு அதிகாரி களும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். குறித்த கிராமத்தில் 569 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் 3 பேர் வருகை தந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 20 ஆம் திகதி வரை தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தமது பிரதேச உப அஞ்சல் நிலையங்கள் மற்றும் பிரதம தபால் நிலையங்கள் ஊடாக இன்றும் பெற்றுக் கொள்ள் முடியும்.

இவ்வாறு வாக்காளர் அட்டைகளை பெற முடியாதவர்கள் தன்னுடைய அடையாளங்களை சரியான முறையில் உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும்.

வாக்களிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம்,மதகுரு அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, கடவுச்சீட்டு, அரச சேவையாளர்களின் ஓய்வூதிய அடையாள அட்டை மற்றும் தேர்தல் திணைக்களத்தின் தற்காலிக அடையாள அட்டையினை பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நெடுங்குளத்தில் விபத்து ஒருவர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியாவில் இராணுவ டிப்பெண்டர் ரக வாகனம் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து வவுனியா நெடுங்குளம் பகுதியில் நேற்று நடைபெற்றது.

இச்சம்பவத்தில்எஸ்மலளசேகர (வயது-56) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மாமடு வீதி வழியாக பயணித்த மோட்டார் சைக்கிளும் நெடுங்குளம் பிரதான வீதி வழியாக வந்த இராணுவ டிப்பென்ரர் ரக வாகனமும் மோதியதில் மோட்டர் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் டிப்பெண்டர் வாகனத்தின் சாரதியான இராணுவ வீரர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-250)

# 6மாத குழந்தைகளுக்கு தென்னங்கன்றுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 6 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளையுடைய குடும்பங்களுக்கு தலா 2 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த போர் காலத்தில் பல்லாயிரக் கணக்கான தென்னைமரங்கள் அழிவடைந்தன. தற்போதுள்ள தென்னைகளும் போரின் போது சேதமடைந்ததன் காரணமாக தெங்குச் செய்கையாளர்கள் உரிய பயன்களை பெறமுடியாத நிலைமை உள்ளது.

தேங்காயின் தேவை கடந்த காலங்களில் நிறைவு செய்யக்கூடிய நிலையிருந்த போதிலும், தொடர்ச்சியாக தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதன் காரணமாக தென்னிலங்கையிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேங்காயைக்கொண்டுவர வேண்டிய நிலைமை சிலவேளைகளில் ஏற்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெங்குச் செய்கையை மேம்படுவதற்கான ஊக்கு விப்புகளை, தன்னார்வு அமைப்புகள் வழங்க வேண்டுமெனவும் சுகாதார பணிமனை வேண்டுகோள் விடுத்தது.

அதற்கமைய சுகாதார பணிமனைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி சுகாதார பணிமனை ஊடாக 314 தென்னங்கன்றுகள் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தேர்தல் வன்முறையில்லை

## முல்லை.உதவி பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நேற்று முன்தினம் வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் எதுவித தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாகவில்லையென்று, முல்லைத்தீவு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் பன்துல வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு ஆகிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில், 98 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள் ளதுடன், சுமார் 450இற்கு மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு கடமையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், 80 இற்கு மேற்பட்ட பொலிஸார், முல்லைத்தீவு மாவட்டத்தை தவிர்ந்த வெளிமாவட்டங்களில் இருந்தும் தேர்தல் கடமைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளதுடன் 18 பொலிஸ் நடமாடும் பிரிவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் இன்றைய தினம் மிகவும் அமைதியான முறையில் வாக்களிப்பில் ஈடுபட்டு, வன்முறைகளில் ஈடுபடுவதை தவிர்த்து பொலிஸாருக்கு ஒத்துழைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-2)




# வாக்களிப்பு நிலையத்திலிருந்த குளவிக்கூடுகள் அகற்றப்பட்டன

ஜனாதிபதி தேர்தலுக்காக இன்றைய தினம் வாக்களிப்பு நடைபெறவுள்ள வவுனியா பாடசாலை ஒன்றில் வாக்குப் பெட்டிகள் செல்வதற்கு சில நிமிடங்களே இருந்த அங்கிருந்த குளவிக் கூடுகள் அவசரமாக அகற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இன்றைய தினம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெறவுள்ள வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் இருந்த குளவிக் கூடு வாக்களிப்பு பெட்டிகள் செல்வதற்கு சில நிமிடங்களே இருந்த நிலையில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் அவசரமாக அகற்றப்பட்டது.

இதன் போது குறித்த பாடசாலைக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவினால் அனுமதி மறுக்கப்பட்டு பொலிசாரின் உதவியுடன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்.

குறித்த சில நிமிடங்களின் பின் வேறு சில ஊடகவியலாளர்களும் அப் பாடசாலைக்கு சென்ற போது அவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அவர்கள் தேர்தல் தொடர்பான செய்தி சேகரிப்பதற்கு அனுமதி அளித்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை காண்பித்த போதும் குறித்த அனுமதி அட்டையில் பதவி முத்திரை பொறிக்கப்படவில்லை எனத் தெரிவித்து பிரதேச செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த வவுனியா பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்த பாடசாலை ஒன்றில் வடமாகாண சபை தேர்தலின் போது கடமைக்காக சென்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

# நோயாளர்களும் வாக்களிக்கலாம்

வடமாகாண வைத்தியசாலைகளில் வைத்திய சிகிச்சையின் நிமிர்த்தம் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் வாக்குச்சாவடிக்கு செல்லக்கூடிய உடல் ஆரோக்கியமுள்ள நோயாளர்கள் மட்டும் இன்றைய தினம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு தங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களித்த பின்னர் [illegible]மே வைத்தியசாலைக்கு சமுகமளிக்க வேண்டுமென வடமாகாணசுகாதார [illegible] பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ்.ஆர்.யூட் தெரிவித்துள்ளார். (அ-2-283)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு நூறு தடவைகள் சிந்தியுங்கள். ஆனால் ஒரு தீர்மானத்திற்கு வந்தபின் அதன் படி ஒழுகுங்கள்.
*~ ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனநாயகத்தின் காவலர்களே! எந்த வதந்திகளையும் நம்பாதீர்கள்

இன்று ஜனாதிபதித் தேர்தல். இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இது. யார் பதவியில் இருந்தாலும் அவர்களைப் பொதுமக்களே தெரிவு செய்கின்றனர். எனவே, வாக்காளப் பெருமக்கள் தங்களின் பெறுமதியான வாக்குகளை துஷ்பிரயோகம் செய்யலாகாது.

அதேநேரம் இலங்கையில் நடைபெறுகின்ற தேர்தல்கள் பொதுமக்களை ஏமாற்றி வாக்குப் பெறுகின்ற தேர்தல்களாக இருப்பது வேதனைக்குரியது.

பொதுவில் ஏப்ரல் முதலாந் திகதி முட்டாள்தினம் என்ற எழுதப்படாத நடைமுறைஉலகம் முழுவதிலும் உண்டு. அன்றைய நாளில் ஒருவரை ஒருவர் ஏமாற்றுகின்ற சம்பவங்கள் நடந்தேறும். சில இடங்களில் கூழ் முட்டைகளால் அடிபட்டுக் கொள்வர். கலர் மைகளால் வீசிக் கொள்வர். ஒட்டுமொத்தத்தில் ஏப்ரல் முதலாம் திகதி ஏதோவொரு வகையில் மற்றவர்களை ஏமாறச் செய்து மகிழ்வடைகின்ற நாளாகி விடுகிறது.

எனினும் இந்த நாளில் பலரும் விழிப்பாக இருப்பர். தங்களை ஏமாற்ற முற்படுபவர்களின் தந்திரோபாயங்களை முறியடிப்பதால் ஏற்படும் ஆனந்தம், ஏமாற்றுவதால் ஏற்படுகின்ற மகிழ்வை விட பன்மடங்கு உயர்வானது.

அந்த வகையில் ஏமாந்து போவது நல்லதல்ல. அது முட்டாள்தனம் என்பதை வெளிப்படுத்துவதாகவும் ஏப்ரல் முதலாம் திகதி பிரகடனமாகியுள்ளது என்று கூறலாம்.

இன்று ஜனவரி 8ந் திகதி. இந்நாளில் ஏப்ரல் முதலாம் திகதி பற்றிய தகவல் எதற்கானது என்று நீங்கள் கேட்டால் அதில் நிறைந்த நியாயம் உண்டு.

ஆனாலும் இலங்கை அரசியல்வாதிகள், தேர்தல் என்று நடைபெறுகின்றதோ! அன்றைய நாளில் பொது மக்களை முட்டாள்களாக்க கடும் பிரயத்தனம் செய்வர். இதைக் கூறவே ஏப்ரல் முதலாம் திகதி பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபித்தோம்.

ஆம், அன்புக்குரிய வாக்காளப் பெருமக்களே! வாக்களிப்பு நாளாகிய இன்றைய தினம் எத்தனையோ வதந்திகள் பரப்பப்படலாம். பொய்கள் தாராளமாகப் பேசப்படலாம். அநாமதேயத் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் நம்பக் கூடியதான கட்டுக் கதைகள் காற்றோடு பறக்க விடப்படலாம். இவை அனைத்தும் பொது மக்களை முட்டாள்களாக்கி தேர்தல் வெற்றியை தத்தமக்கு ஆக்குவதற்காக அரசியல்வாதிகள் கையாளும் கபடத்தனங்களாகும்.

எனவே பொதுமக்களாகிய நீங்கள் உங்களை உசார்ப்படுத்துங்கள். தேவையற்ற கதைகளை தவிர்த்துக் கொள்ளுங்கள். வாக்களிப்பு மிகவும் இரகசியமானது. நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை ஒரு போதும் கண்டறிய முடியாது. ஆகையால் எந்த ஏமாற்றுங்களையும் வதந்திகளையும் நம்பாமல் நேரகாலத்தோடு வாக்களிப்பு இடங்களுக்குச் சென்று உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள்.

அரசியல்வாதிகள் வதந்திகளைப் பரப்புவதற்கு உங்களை பயன்படுத்துவர். அதற்கு ஒருபோதும் இடம் கொடாதீர்கள். எல்லாம் நல்லதாக நடக்கட்டும். இன்றைய தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்கும் உயர்ந்த நீதிபதிகள் நீங்கள் என்பதால், அது பற்றி நாம் எதுவும் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். எந்த வதந்திகளையும் போலித்தனங்களையும் நம்பாதீர்கள். வாக்களிப்பதற்கான பாதுகாப்பு மிகவும் பலமாக இருப்பதால் அஞ்சாமல் உங்கள் கடமையைச் செய்யுங்கள். இறைவன் நம் எல்லோருக்கும் அருள் பாலிக்கட்டும்.

## நியாயமான தேர்தலை ஆணையாளர் நடத்துவார்-அரசு

பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில், தேர்தல் ஆணையாளர் நியாயமான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பார் என உறுதியளிக்க முடியும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான அமைச்சர் அனுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கான ஒத்துழைப்பு அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளை சந்தித்தபோதே யாப்பா இதனை தெரிவித்துள்ளார். (செ-11)

## 28 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(கொழும்பு)

நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் 91 வீதம் வரை உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் தொடர்ச்சியாக பெய்த கடும் மழையினால் நாட்டின் 73 நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் ஜானகீ மீகஸ்தென்ன குறிப்பிடுகின்றார்.

இந்த நிலைமையின் கீழ் 28 நீர்த் தேக்கங்கள் வான் பாய்வதாகவும், நான்கு நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் இன்னும் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலநறுவையில் கவுடுல்ல நீர்த் தேக்கம், அம்பாந்தோட்டையில் இஹலகல மற்றும் லுணுகம்வெஹெர நீர்த் தேக்கங்கள், குருநாகலில் தெதுருஓயா நீர்த் தேக்கம் ஆகியவற்றின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் கூறினார்.

அண்மையில் நிலவிய மழை வெள்ளத்தினால் நீர்த் தேக்கங்கள், சிறியளவிலான மற்றும் நடுத்தர குளங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விபரங்களை திணைக்கள உத்தியோகத்தர்கள் மதிப்பீடு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை சுமார் ஐயாயிரம் மில்லியன் ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (செ-11)

### வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த

## 795 மதுபான போத்தல்களுடன் ஹட்டனில் 4 பேர் கைதாகினர்

மலையக வாக்காளர்களுக்கு விநியோகிக்க மதுபான போத்தல்களை சட்டவிரோதமாக கொண்டு சென்ற 4 பேர் நேற்று ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் வைத்து பொலிஸாரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படியே விரைந்து சென்று, லொறியை சுற்றிவளைத்து விசாரணை மேற்கொள்ளும் போது இவ்வாறு மதுபான போத்தல்களை கொண்டு செல்கின்றமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து லொறியில் பயணித்த நால்வரையும் கைது செய்துள்ளனர். இதில் பெண் ஒருவரும் அடங்குகின்றார்.

தலவாக்கலையிலிருந்து மஸ்கெலியா, கினிகத்தேனை ஆகிய பகுதிகளுக்கு லொறியில் 795 மதுபான போத்தல்கள் கொண்டு சென்றதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். இதன் பெறுமதி-8 இலட்சம் ரூபாய் என ஹற்றன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

லொறியையும், 795 போத்தல்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்த சந்தேக நபர்கள் நால்வரையும் நேற்று ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ-11)

## பொலிஸாருக்கு எதிராக 483 முறைப்பாடுகள்

கடந்த வருடத்தில் பொலிஸாருக்கு எதிராக 483 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதில் 426 முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் பண்டார தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரின் செயற்திறனின்மை தொடர்பிலேயே கடந்த வருடம் 206 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பக்கச்சார்பாக செயற்பட்டமை தொடர்பில் 127 முறைப்பாடுகளும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் 97 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

0710361010 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொலிஸார் குறித்து முறைப்பாடு செய்யலாம் என ஆணைக்குழுவின் செயலாளர் கூறியுள்ளார். (செ-11)

## பரீட்சை மோசடி; விசாரணை ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் மோசடிகளில் ஈடுபட்ட மாணவர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 6 இலட்சம் மாணவர்கள் இம்முறை பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் 120 இலட்சத்திற்கும் அதிகமான விடைத்தாள்களை பரிசீலிக்க உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார். இதன் முதற்கட்டம் கடந்த 5 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் விடைத்தாள் திருத்தும் பணிகள் 16 ஆம் திகதியில் இருந்து, 23 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் சாதாரண தர பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகளின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதியில் இருந்து பெப்ரவரி 3 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

## தேர்தல் பணி வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் விபத்து

### -ஒருவர் காயம்

(கரணவாய்)

தேர்தல் பணியில் ஈடுபட்ட வாகனம் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் உடுப்பிட்டி வடக்கை சேர்ந்த ஜோசப் அன்ரன் தேவராஜா (வயது 48) என்பவரே காயமடைந்துள்ளார்.

தேர்தல் பணியில் ஈடுபட்ட ARO பதவி நிலை அதிகாரியுடைய பிக்கப் ரக வாகனத்துடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருடைய கால் முறிந்துள்ளது.

காயமடைந்த நபர் மந்திகை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## சத்திய தரிசனம்



### மகிழ்ச்சி ஒளி வீசட்டும்


❖ நல்லெண்ணத்துடன் செயல்படுங்கள். நேர்மை நெஞ்சினராக வாழுங்கள்.

❖ அதிகாலைப் பொழுதில் எழுந்து பழகி விட்டால் நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் பணியாற்றலாம்.

❖ உயர்ந்த இடத்தில் உள்ள நட்சத்திரத்தைப் போல மனதை என்றும் பிரகாசமாக வைத்திருங்கள்.

❖ பிறரிடமுள்ள நல்ல விஷயங்களை மட்டும் பார்க்கப் பழகுங்கள். இதனால், எல்லோரும் மகிழ்ச்சியாக வாழலாம்.

❖ மனம் நம்பிக்கையின் உச்சத்தில் இருந்தால் அதிலிருந்து மகிழ்ச்சி ஒளி மட்டுமே வீசும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவபுராணம் கூறும் வில்வ மகிமை

வில்வ இலை ரொம்பவே உயர்வானது. வில்வத்தின் பெருமைகளைப் பற்றிச் சிவபுராணம் விரிவாகச் சொல்லியுள்ளது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ மலரானது ஒரு இலட்சம் தங்க புஷ்பங்களுக்கு இணையானது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படியென்றால் அதன் சிறப்பு உங்களுக்குப் புரியுமே. அதைத்தவிர ஒரு வில்வமரத்தை வீட்டில் வளர்த்தால் அஸ்வமேத யாகம் செய்த பலனும் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனும் கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உலகில் உள்ள அத்தனை சிவாலயங்களைத் தரிசித்த பலனும் கிடைக்கும்.

அதைத்தவிர வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு அதற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. அதைப்பறித்து எத்தனை நாட்கள் ஆனாலும் உலர்ந்து போனாலும்கூட பூஜைக்குப் பயன்படுத்தலாம். ஏனைய மலர்களையோ இலைகளையோ அந்த மாதிரிப் பயன்படுத்தக்கூடாது. இது வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலுவான நிலையில் அவுஸ். இந்தியா கௌரவமான ஆரம்பம்

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட்டின் 2 ஆம் நாள் முடிவில் அவுஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

இந்தியா- அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது.

முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் ஆட்டத்தின் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 348 ஓட்டங்கள் குவித்து இருந்தது.

தொடக்க வீரர் வார்னர் சதம் அடித்தார். அவர் 101 ஓட்டங்களும் மற்றொரு தொடக்க வீரர் ரோஜர்ஸ் 95ஓட்டங்களும் எடுத்தனர். கப்டன் ஸ்டீவ் சுமித் 82 ஓட்டமும் வாட்சன் 61 ஓட்டமும் எடுத்து ஆட்டம் இழக்காமல் களத்தில் இருந்தனர்.



நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள். சுமித் மிகவும் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அவர் 168 பந்துகளில் 14 பவுண்டரியுடன் 100 ஓட்டத்தை தொட்டார். இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் சுமித்தின் ஆட்டம் நம்ப முடியாத வகையில் அபாரமாக இருக்கிறது. இந்த தொடரில் அவர் அடித்த 4ஆவது சதம் இதுவாகும்.

இதன் மூலம் சுமித் புதிய சாதனை படைத்தார். ஒரு தொடரில் தொடர்ந்து 4 சதம் அடித்த முதல் அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை பெற்றார். தென் ஆபிரிக்காவை சேர்ந்த காலிஸ் ஒருவர் மட்டும் தான் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் 4 போட்டியிலும் சதம் அடித்து இருந்தார். இன்று அவரை சுமித் சமன் செய்தார்.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்ட்டில் 162 ஓட்டங்களும் பிரிஸ்பேனில் நடந்த 2ஆவது டெஸ்டில் 133 ஓட்டங்களும் மெல்பேனில் நடந்த 3ஆவது டெஸ்டில் 192 ஓட்டங்களும் எடுத்தார். தற்போது சிட்னியில் நடைபெற்று வரும் 4ஆவது டெஸ்டிலும் சுமித் செஞ்சுரி அடித்து முத்திரை பதித்தார். 26ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 8ஆவது சதம் ஆகும்.

சுமித்-வாட்சனின் ஆட்டத்தால் அவுஸ்திரேலியாவின் ஓட்டம் மளமளவென்று உயர்ந்தது. 106. 4 ஆவது ஓவரில் அந்த அணி 400 ஓட்டத்தை தொட்டது.

அடுத்த ஓவரில் இந்த ஜோடி பிரிந்தது. வாட்சன் 81 ஓட்டத்தில் முகமது ஷமி பந்தில் அஸ்வினிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 400 ஆக இருந்தது. 3ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 196 ஓட்டங்கள் சேர்த்தது. அடுத்து ஷான் மார்ஷ் களமிறங்கினார்.

மிகவும் சிறப்பாக விளையாடி வந்த சுமித் 117 ஓட்டத்தில் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை உமேஷ் யாதவ் கைப்பற்றினார். அப்போது ஓட்ட எண்ணிக்கை 415 ஆக இருந்தது.

5ஆவது விக்கெட் ஜோடியான மார்ஷ்-பர்ன்ஸ் ஜோடியும் சிறப்பாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தது. இதனால் 142.1 ஓவரில் அவுஸ்திரேலியா 500 ஓட்டத்தை குவித்தது.

மார்ஷ் 73 ஓட்டமும் ஜோபர்ன்ஸ் 58 ஓட்டமும் எடுத்து முகமது ஷமி பந்தில் ஆட்டம் இழந்தனர். அடுத்து களமிறங்கிய ஹாரிஸ் 9 ஓட்டங்களில் அவுட்டாகாமல் இருக்க, ஹாரிஸ் 9 பந்தில் 25 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார். இதை யடுத்து 7 விக்கெட் இழப்புக்கு 572 ஓட்டங்கள் என்ற நிலையில் அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது.

பின்னர் இந்திய அணி தனது முதல் இன்னிங்சை தொடர்ந்தது. ஆரம்பமே இந்திய அணிக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்தது. ஸ்டார்க் வீசிய முதல் ஓவரின் மூன்றாவது பந்தில் விஜய் டக் அவுட்டாகி வெளியேறினார். நேற்றைய 2ஆம் நாள் முடிவில் இந்தியா 71 ஓட்டங்களும் ஒரு விக்கெட்டினையும் இழந்து துடுப்பெடுத்தாடுகின்றது. போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

விளையாட்டுச் செய்திகள்

## கரீபியன் அணியை வீழ்த்தி தொடரை வென்றது தெ.ஆபிரிக்கா

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதன்மூலம் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தையும் தொடர்ந்து தக்கவைத்தது.




தனது 2ஆவது இன்னிங்ஸில் 182 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் என்ற ஸ்திரமான நிலையில் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, டேல் ஸ்ரெய்ன் - அறிமுக வீரர் சைமன் ஹார்மரின் பந்து வீச்சு சூறாவளிக்குள் சிக்கி விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளின் நிறைவில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில்,

3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 2ஆம் திகதி கேப் ரவுண் நியூலாண்டில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 329 ஓட்டங்களை எடுத்ததுடன், தொடர்ந்து முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டிவில்லியர்ஸின் அபாரமான சதத்தின் உதவியுடன் 421 ஓட்டங்களை எடுத்தது.

92 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 3ஆம் நாள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்து 88 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 4ஆம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவ்வணி ஸ்ரெய்ன் (3) - ஹார்மரின் (4) பந்துவீச்சு சூறாவளிக்குள் சிக்கி 215 ஓட்டங்களுக்கு தனது அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

124 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி அன்றைய 4ஆம் நாள் ஆட்ட நேர நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 9 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றியிலக்கை (124) 8 விக்கெட்டுக்களால் அடைந்தது.

துடுப்பாட்டத்தில்எல்கர் 60, அம்லா 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் டிவில்லியர்சும் தொடர் நாயகனாக தென்னாபிரிக்காவின் அம்லாவும் தெரிவாகினர்.

இரு அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரின் முதல் போட்டி வரும் 9ஆம் திகதி இதே மைதானத்தில் ஆரம்பமாகிறது. (க)

## மென்பந்துப் போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மாவட்ட ரீதியிலான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி இவ்வருடமும் 4ஆவது தடவையாக இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் வருடாந்த மாபெரும் தைப்பொங்கல் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறுக்கிழமைகளில் மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

2ஆம் சுற்று மற்றும் இறுதிப்போட்டி என்பன பொங்கல் தினத்தன்று இடம்பெறும்

போட்டிகள் யாவும் அணிக்கு 6 வீரர்கள் 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப்போட்டியாக நடைபெறும் .இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் தமக்கான பதிவுகளை 07708693445, 0771641413 ஆகிய இலக்கங்களினூடாக மேற்கொள்ள முடியும் என சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (க-23)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

(மானிப்பாய்)

வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் வருடாந்த மாவட்ட ரீதியிலான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

போட்டிகள் யாவும் அணிக்கு 8 வீரர்கள் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுற்றுப் போட்டியாக நடை பெறும். இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் தமக்கான பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க-23)

## நியூசிலாந்து வெற்றி

இலங்கை அணியை வீழ்த்தி டெஸ்ட்தொடரை வென்றதுநியூசிலாந்து.

நியூசிலாந்து -இலங்கை அணிகள் மோதிய 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடந்தது.

நியூசிலாந்து முதல் இனிங்சில் 221 ஓட்டமும் இலங்கை முதல் இனிங்சில் 356 ஓட்டமும் எடுத்தன.

நியூசிலாந்து அணி 2 ஆவது இன்னிங்சில் 524 ஓட்டமும் குவித்தது.இதனால் இலங்கை அணிக்கு 390 ஓட்டம் இலக்கு நிர்ணயிக்கப் பட்டது.



நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டம் எடுத்து இருந்தது.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி 72.4 ஓவரில் 196 ஓட்டத்தில் சுருண்டது.இதனால் நியூசிலாந்து 193 ஓட்டம் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

திரிமானே அதிக பட்சமாக 62 ஓட்டம் (அவுட் இல்லை) எடுத்தார். கிரேக் 4 விக்கெட்டும் போல்ட் பிரேஸ் வெல் தலா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினார்கள்.

இந்த வெற்றி மூலம் 2 போட்டி கொண்ட தொடரை நியூசிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதல் டெஸ்டில் அந்த அணி 8 விக்கெட்டில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக வில்லியம்சன் தெரிவானார்.

இரு அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி வருகின்ற 11 ஆம் திகதி நடைபெறும். (க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று வாக்களிப்பது எப்படி?

தகவல் விளக்கப்படம்

✗ 7ஆவது ஜனாதிபதி தேர்தல் 2015

இன்று நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 15,044,490 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 12,314 வாக்களிப்பு மையங்களில் மு.ப 7.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை வாக்களிப்பு நடைபெறும்.




1

வாக்காளர் அட்டவணையுடன் வாசலில் அமர்ந்திருக்கும் முதலாவது எழுதுவினைஞரிடம் வாக்காளர் அட்டை, அடையாளப்படுத்தும் ஆவணம் என்பவற்றை வாக்காளர் காட்டவேண்டும். வாக்காளர் அட்டை கட்டாயமானதல்ல. ஆனால், அடையாளப்படுத்தும் ஆவணம் அவசியம். இந்த எழுதுவினைஞர், வாக்காளர் அட்டவணையில் வாக்காளரின் பெயரை தேடிக்கண்டுபிடிப்பார். பின்னர் வாக்காளரின் பெயரையும் தொடரிலக்கத்தையும் வாக்கெடுப்பு முகவர்களுக்கும் வாக்குச்சீட்டுக்கு பொறுப்பான அலுவலருக்கும் கேட்கும்வகையில் உரத்து வாசிப்பார்.




2

இதன் பின்னர் வாக்காளர், மை பூசும் அலுவலரிடம் செல்வார். அவர், இடது கையின் சின்ன விரலில் மை பூசப்பட்டுள்ளதா என பார்த்து, அப்படி இல்லாதவிடத்து அழிக்கமுடியாத வகையில் மையை சின்ன விரலில் பூசி அடுத்த அலுவலரிடம் அனுப்புவார்.



3

இதற்கிடையில் 3ஆவது அலுவலர், வாக்காளரின் வாசிக்கப்பட்ட தொடரிலக்கத்தை வாக்குச்சீட்டின் அடிக்கட்டையில் (counterfoil) எழுதிவிடுவார். இதன் பின்னர் வாக்குச்சீட்டை அடிக்கட்டையிலிருந்து கிழித்தெடுத்து, வாக்குச்சீட்டின் ஓரத்தில் தனது உத்தியோகபூர்வ முத்திரையை பதிப்பார். இதன்பின்னர் வாக்குச்சீட்டை மேல் நோக்கி பார்க்குமாறுபிடித்து வாக்காளரிடம் கொடுப்பார்.




4

வாக்காளர் அடைப்பு ஒன்றுக்குள் சென்று வாக்குச்சீட்டில் தெரிவு அடையாளத்தை இடுவார். பின்னர் வாக்குச்சீட்டை மடித்து வாக்குப்பெட்டியினுள் இடுவார்.

வாக்களிப்பு நிலையத்தினால் வழங்கப்படுகின்ற பேனையை (அழிக்கமுடியாத மை கொண்டது) மட்டுமே பயன்படுத்தி வாக்களிக்க முடியும்.

5




## வாக்குப்பெட்டி

வாக்குச்சீட்டை உள்ளே போடக்கூடியதாகவும் ஆனால் திறக்காமல் உள்ளிருந்து எடுக்க முடியாதவகையிலும் வாக்குப்பெட்டி ஆக்கப்பட்டிருக்கும்.

வாக்களிப்பு 7.00 மணிக்கு தொடங்குமுன்னர், முகவர்களின் முன்னிலையில் வெற்றுப்பெட்டிகள் காண்பிக்கப்படும். பெட்டி பூட்டப்பட்டு சீல் வைக்கப்படும். பெட்டியின் திறப்பு ஒரு உறையிலிடப்பட்டு சீல் வைக்கப்படும்.


## வாக்குச்சீட்டு

வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பெயர்கள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டிருக்கும். வேட்பாளரின் சின்னம் அவரின் பெயருக்கு எதிரே இருக்கும்.





## வாக்களிக்கும் முறை

யாருக்கு வாக்களிக்க வேண்டுமோ அவரின் பெயர், சின்னத்துக்கு எதிரே வலப்பக்கத்திலுள்ள இடைவெளியில் "x" அல்லது "1" என அடையாளமிடுக.




## விருப்புத்தெரிவை காட்டும் முறை

மூன்று வேட்பாளருக்கு மேல் இருக்குமிடத்து இரண்டாவது விருப்புத் தேர்வுக்குரியவரின் பெயர் மற்றும் சின்னத்துக்கு எதிரே 2 எனவும் 3ஆவது விருப்புத்தெரிவையும் குறிப்பிட விரும்பின் அதற்குரியவரின் சின்னத்துக்கு எதிரே 3 எனவும் குறியிடுக.




2ஆவது 3ஆவது விருப்பு குறிக்கப்பட்ட வாக்கு செல்லுபடியான வாக்காகும்.

ஆனால், வாக்கு போடாது இரண்டாவது அல்லது 3ஆவது தெரிவு குறிக்கப்பட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாகும்.

6

## ஜனாதிபதி தெரிவுசெய்யப்படுவது எவ்வாறு

செல்லுபடியான வாக்குகளில் 50 சதவீதத்திலும் ஒருவாக்கு கூடுதலாக பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்திலும் கூடுதலாகப்பெறத்தவறின், மேல் மட்டத்திலுள்ள இரு வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் விலக்கப்பட்டு, விலக்கப்பட்ட வாக்காளர்களின்

முதலாவதாக, முன்னிலையிலுள்ள இரண்டு வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு , அவை முன்னிலையிலுள்ள இரண்டு வேட்பாளர் களின் வாக்குகளுடன் கூட்டப்படும்.

இதன்போது யாராவது 50 சதவீதத்திலும் கூடுதலாக பெறின், அவர் ஜனாதிபதி தேர்தலில் வென்றவராவார்.

**அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள்:** தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதியர் அடையாள அட்டை, மதகுருமாருக்கு ஆட்பதிவு திணைக்களம் வழங்கிய அடையாள அட்டை, தேர்தல்கள் திணைக்களம் வழங்கிய தற்காலிக அடையாள அட்டை.

*Source: Presidential Elections Act*

# உலகக் கிண்ண போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு




அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டு ள்ளது.

11-வது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வருகின்ற பெப்ரவரி 14-ம் திகதி முதல் மார்ச் 29-ம் திகதி வரை நடக்கிறது. ஏற்கெனவே 30 பேர் கொண்ட உத்தேச இந்திய அணி அறிவிக் கப்பட்ட நிலை யில், 15 பேர் கொண்ட இறுதி அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அணி யில் அக்சர் படேல், ஸ்டூவர்ட் பின்னி ஆகி யோருக்கு வாய்ப்பு கொடுக்கப் பட்டுள்ளது.

15 வீரர்கள் கொண்ட அணி விவரம்:

தோனி (அணித்தலைவர்), ரோஹித் சர்மா, ஷிகர் தவான், விராட் ஹோலி, அம்பாத்தி ராயுடு, சுரேஷ் ரெய்னா, அஜிங்கிய ரஹானே, மொகமது ஷமி, ஸ்டூவர்ட் பின்னி, ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், இஷாந்த் சர்மா, புவனேஷ்வர் குமார், அஸ்வின், உமேஷ் யாதவ்.

எனினும் அதிகமாக எதிர்பார்க்கப்பட்ட முன்னணி வீரர் யுவராஜ், சிங் ஹர்பஜன் சிங், வீரேந்திர சேவாக், கௌதம் கம்பீர், சகீர்கான் ஆகியோர் இந்திய அணியில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அச்சமின்றி...

நாடளாவிய ரீதியில் தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 71 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

வாக்களிப்பது அனைவரது உரிமை என்பதால் யாரும் வாக்களிப்பதை தடுக்க முடியாது எனவும் அவ்வாறு தடுத்தாலும் அத்தடைகளை மீறியும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனைவிட சர்வதேச கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதனாலும் மக்கள் அசம்பாவிதங்கள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே தெரிவித்துள்ளது.

முக்கியமாக வாக்களிப்பின்போது பரப்பப்படுகின்ற போலியான வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் காலையிலேயே வாக்களிப்பதன் மூலம் மோசடிகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டிலுள்ள சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் நேற்றுக் காலை முதல் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு வாக்களிப்பு நிலையங்களை அண்டிய பகுதிகளில் பொலிஸார் ரோந்துப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கெண்ணும் நிலையங்களுக்கு விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸாரரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (செ-4)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

# தமிழர் பிரச்...

வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் விஜய் ஜோலி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தத் தேர்தலில் எவர் வெற்றி பெற்றாலும் முதலில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகம் நிலை பெறுவதற்கு அமைதியானதும், நீதியானதுமான தேர்தல் அவசியம் என்றும் இந்த அறிக்கையில் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அதிகாரங்களைப் பகிர்வது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பன இலங்கையில் நிலையான அமைதியை ஏற்படுத்தும் என்றும் விஜய் ஜோலி மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்
அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online, விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்
கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்
V2 Travels and Tours
● மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
● எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்
அனைத்து நாடுகளிற்குமான விரைவு பொதிகள் சேவை
எந்த நாட்டிற்கும் உணவு, கருவாடு,எண்ணெய் வகைகள் என எல்லாவகை பொருட்களையும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் விரைவாகவும் அனுப்பிக்கொள்ளலாம்
யாழ்மாவட்டம்,கிளிநொச்சியில் எந்தபிரதேசமாக இருப்பினும் உங்கள் வீடுகளில் தராசுடன் வந்தே பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்
வீடுகளில் பெற்றுக்கொள்ளப்படும் பொதிகளுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது
5Kg க்கு உட்பட்ட பொதிகளுக்கு பெட்டிநிறை சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது
யாழ்ப்பாணம் 9/A கஸ்தூரியார் வீதி, மோதர நகைகள் முன்னால் 0773867257
நெல்லியடி முடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960

தற்போது யாழ் நகரில்...
edexcel | WOLVERHAMPTON
சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்
BTEC HND in
Computing & Systems Development
- நவீன உலகின் தொழிற்சந்தை வாய்ப்பு மற்றும் மாற்றங்களை கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநெறிக் கட்டமைப்பு
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை (Job Oriented) உறுதிப்படுத்தும் முழு நேர தீவிர பயிற்சி நெறியுடன் கூடிய கற்கை நெறி
- நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
- BCAS Campus இன் Colombo தலைமையகத்திலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்
(சி-9756)




15 YEARS
www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Design @ MacroAdz.com
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar

எமது அன்புக்குரிய இலங்கைத் தீவின் மக்களுக்கு!
வாக்களிப்பது உங்கள் உரிமை
காலை எழுந்திருங்கள்
வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லுங்கள்
நீங்கள் வாக்களியுங்கள்
உங்கள் குடும்ப அங்கத்தவரை வாக்களிக்கச் செய்யுங்கள்
உங்கள் அயலவரை வாக்களிக்கச் செய்யுங்கள்
உங்கள் உறவினர்களை வாக்களிக்கச் செய்யுங்கள்
வாக்களிப்பது உங்கள் ஒவ்வொருவரது கடமையாகும்
வளமான அழகான தேசத்தை கட்டியெழுப்புவோம்.




வாக்களிப்பது ஒவ்வொருவரது சுதந்திரமாகும்.




(சி-9755)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.